www.padippakam.com

ஜன-ஏப்'93 மக்கள் கலை இலக்கியக் கழக இதழ் விலை ரூ.2-5

# புதிய கலாச்சாரம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

## பம்பாய்



சிவசேனா
பாரதீய
ஜனதா
குண்டர்கள்
பம்பாயில்
நடத்திய
வெறியாட்டம்

ரத்தம்
கொதிக்க
வைக்கும்
சம்பவங்கள்,
பேட்டிகளின்
தொகுப்புக்
கட்டுரை

# பார்ப்பன பயங்கரவாதம்

படிப்பகம்

www.padippakam.com

# கேட்ஸா சேதி!

## ''நாங்கள் வாழ விரும்புகிறோம்!''

நெதர்லாந்தைச் சேர்ந்த பெண் சிற்பி ரூதி வாடர்மேன். போபால் விஷவாயுப் படுகொலை நடந்தபோது கல்கத்தாவிலிருந்தார் ரூத். செய்தி அவரை உலுக்கியது. ''இதற்குக் காரணம் மேற்கத்தியச் சமுதாயம். இதில் எனக்கும் சம்பந்தம் உண்டு. அதற்கு ஒன்றும் செய்யாமல் நான் சும்மா இருந்தால் குற்றம் புரிந்தவளாவேன்'' என்று அறிவித்த ரூத், மனிதன் என்ற முறையில் தான் செய்ய வேண்டிய முதல் வேலைகளைச் செய்யத் தொடங்கினார்.

போபாலில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மத்தியில் சென்று சமூக ஊழியம் செய்தார். போபால் கொலை பற்றிய உண்மைச் செய்திகளை ஒளிவு மறைவில்லாமல் உலகெங்குமுள்ள பத்திரிக்கைகளில் எழுதினார். அப்போது மம்தா என்ற குழந்தையின் கதையைக் கேள்விப்பட்டார். அவள் தாய் குழந்தையைக் காப்பாற்றத் தப்பி ஓடும்போதே மூச்சுத்திணறி உயிரிழந்தாள்; மம்தா எப்படியோ தப்பிவிட்டாள். ரூத் மம்தாவாக தன்னை எண்ணிப்பார்த்துக் கொண்டார்.

ரூத்தின் வாழ்க்கையும் அதுவேதான். ஆம்ஸ்டர்டாம் நகரைச் சேர்ந்த யூத குடும்பத்தில் பிறந்தவர். கொலைகாரன் ஹிட்லர் அவரது தாயை விஷவாயு அறையில் தள்ளிக் கொன்றுவிட்டான். பிறகு நாடோடியாகவே சுற்றிய ரூத் கடைசியில் நெதர்லாந்துக்கு வந்து சிற்பம் கற்றுப் பிரபலமானார்.

இந்தியாவிலிருந்து திரும்பிய ரூத்தின் மனது அமைதியின்றித் தவித்தது. மெள்ள மெள்ள அவர் மனத்திலேயே மம்தாவைத் தாங்கி ஓடும் தாயின் சிற்பத்தைச் செதுக்கத் தொடங்கினார். போபாலிலேயே அச்சிற்பத்தை நிறுவிவிட வேண்டுமென்றும் துடித்தார்.

செலவுக்கு முதலாளிகளிடம் பிச்சைக்கு நிற்கவில்லை; உலகெங்கும் உள்ள கலைஞர்கள், நண்பர்களுக்கு எழுதி கொஞ்சம் கொஞ்சமாகக் காசு சேர்த்தார். இந்தியாவுக்கு வர விண்ணப்பித்தார். இந்தியத் தூதரகம் விசா தராமல் தடுப்புகள் போட்டது. ''எங்கள் கலைப் பொக்கிஷங்களான தாஜ்மகால், அஜந்தா, கஜிராகோவிற்குப் போங்களேன். ஏன் விபத்து நடந்த இடத்துக்கெல்லாம் போகிறீர்கள்? எதற்கு வீண் வம்பெல்லாம்?'' ரூத் விடவில்லை; வாதாடினார்; ஒரு கலைஞன் என்ற முறையில் போபாலில் நடந்தது என்னைப் பாதித்தது. அந்த உணர்ச்சியை, எதிர்வினையை நான் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட கோரக் கொலைகள்தான் மனித சமூகத்தையே அழித்து விடுகின்றன. இதற்கெதிராகப் பிறந்தவைதான் உலகின் அற்புதக் கலைப்படைப்புகள்.''

கடைசியாக, அனுமதிக்கப்பட்டார். போபாலுக்கு சிலையைக் கொண்டு சென்றபோது, ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள். ''அங்கிருந்த மக்களே தங்கள் கையால் வார்ப்பை உடைத்து சிலையை வெளியே எடுத்தார்கள். அது அவர்களின் சிற்பமாகி விட்டது.'' ரூத் உணர்ச்சி வசப்பட்டு சம்பவத்தை விவரித்தார்.

சமூக கண்ணோட்டமும் அக்கறையும் கொண்ட எந்த ஒரு கலைஞனும் முதலில் அவர் ஒரு மனித்ராகவும், பிறகுதான் கலைஞனாகவும் நடந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் ரூத் சிலை வடிக்கு முன்பும் சமூக ஊழியம் செய்தார்; வடித்த பிறகும் அந்தப்பெருமை மயக்கத்தில், போதையில் பொழுது போக்கவில்லை; போபாலில் அனாதைகளாக விடப்பட்ட குழந்தைகளுக்கு சர்வதேச அளவில் நிவாரணம் பெற்றுத் தர இன்னமும் உழைக்கிறார்; தான் சிற்பி மட்டுமே என்ற எல்லைபோட்டுக் கொள்ளாமல், நிலைமைகோரும் தேவைக்கேற்ப அவர் இப்போது 'ஆலை விபத்துக்கள் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான சர்வதேச விசாரணைக் கமிட்டி' போபாலில் நடத்திவரும் விசாரணையை நெதர்லாந்து பத்திரிக்கைகளில் வெளியிடுவதற்காக நிருபர் வேலை செய்து வருகிறார்.

மாடர்ன் ஆர்ட் என்ற போர்வையில் போபாலிலேயே உள்ள பாரத்பவன் ஓவியர்கள், சிற்பிகள், சென்னை - பெங்களூர் - பம்பாய் - டெல்லி களாமேலாக்களில் பங்கேற்ற பெரும்பாலான கலைஞர்கள் தங்களது பாலியல் அரிப்புக்களையும், கோரமான மனவக்கிரங்களையும் துளிக்கூட வெட்கமில்லாமல் காட்சிக்கு வைத்து வயிறு வளர்க்கிறார்கள். அயோத்தி மசூதி இடிப்புக்குப் பிறகும் இவர்களில் அனோகம் பேருக்குச் சொரணை இல்லை. அவர்களோடு ஒப்பிடுகையில் ரூத் வாடர்மேன் மானமிக்க, துணிச்சலுள்ள மனிதாபிமானி!



ரூத் செதுக்கியுள்ள அச்சிலையின் அடிப்பீடத்தில் பொறித்துள்ள எழுச்சி மிக்க சொற்கள் இவை: ''ஹிரோஷிமாவை, போபாலை மறுபடி நடக்க அனுமதிக்க மாட்டோம்! நாங்கள் வாழ விரும்புகிறோம்!''

## இந்து மதத்துக்குப் பரந்த மனப்பான்மையா?

★ ''கடவுள் இராமன் இந்திய தேசியத்தின் உருவகம். அத்தகைய தேசிய நாயகனுக்கு கோவில் எழுப்ப இந்திய யூனியன் முஸ்லீம் லீக் எதிராகவுள்ளது. சிறுபான்மையினர் அனைவரும் ஓர் அணியில் திரண்டு விடுவதால் மட்டும், அது அவர்களின் பாதுகாப்புக்கு எந்தவித்திலும் உத்திரவாதமாகி விடாது. பெரும்பான்மையினரான இந்து சமூகத்தினரின் பரந்த மனப்பான்மையின் காரணமாகவே, இந்த நாட்டில் மதச்சார்பின்மை தழைத்தோங்கி வளர்ந்துள்ளது'' இவ்வாறு பேசியிருப்பது யார் தெரியுமா? காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரான ஏ.கே.அந்தோணி. 'சிறுபான்மையினரின் ஒரே பாதுகாவலன் தான்' என வேடங்கட்டி வரும் காங்கிரசு கயவானித்தனத்திற்கு இந்தப் பேச்சு நல்ல உதாரணம்!

## வரலாற்றை வளைக்க இந்து வெறியரின் மிரட்டல்

★ உ.பி.யில் பள்ளிக்கூட வரலாற்றுப் பாடங்களை தங்களின் வசதிக்கேற்ப மாற்றி எழுதிய, இந்து மதவெறி குண்டர்கள், 'மசூதிக்கு முன்பு அங்கு ராமர் கோயில் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை' என கருத்துக் கூறியுள்ள வரலாற்று பேராசியர்களுக்கு மிரட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளனர். டில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், 'கருத்துக்களை மாற்றிக் கொள்ளாவிடில் கடுமையான பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்' என்றும், ஒரு பெண் பேராசிரியருக்கு. 'பாலியல் ரீதியான தாக்குதலைச் சந்திக்க வேண்டியிருக்கும்' என்றும் கடிதங்கள் வந்துள்ளன. 'போலீசுக்கு இப்பிரச்னையை எடுத்துச் செல்நதில் பலனில்லை' எனக் கூறியுள்ள பேராசிரியர்கள், 'இதற்காக எங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளப் போவதில்லை' என அறிக்கை விடுத்துள்ளனர்.

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 10
● குரல்: 8-11
● ஜன-ஏப் '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டுச் சந்தா: ரூ.30

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 8

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

ஆர்.சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

# இந்து மத வெறியை 'எதிர்க்கும்' மண் குதிரைகள்!

இந்துத்துவம், போலி மதசார்பின்மை போன்ற புதிய சொற்றொடர்களுடன் தனது பார்ப்பன பாசிசத்தை நியாயப்படுத்த கருத்துப் போராட்டக் களத்தில் இறங்கியிருக்கிறது பாரதீய ஜனதா. அதை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகள், ஜனதா தளம், தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகள், மத நல்லிணக்கம், மதஒற்றுமை என்ற சொற்களையும் கோட்பாடுகளையும் முன்நிறுத்துகின்றன. மதசார்பின்மை என்ற கோட்பாட்டை வலியுறுத்துவதேகூட இவர்களைப் பொருத்த வரை தீவிரவாதமாகிவிட்டது.

அதேபோல பாரதீய ஜனதாவின் டெல்லி பேரணி தடை செய்யப்பட்டதையும் இந்த 'எதிர்க் கட்சிகள்' ஆதரிக்கவில்லை என்று மழுப்பியுள்ளனர். 'இந்துத்துவம்' என்ற தங்களது கொள்கையைச் சித்தாந்தரீதியாகச் சந்திக்கத் திராணியற்ற அரசு தங்கள்மேல் பாசிச அடக்குமுறையை ஏவிவிடுவதாகவும், இந்த ஈனத்தனத்திற்கு எதிர்க் கட்சிகள் உடந்தையாக இருப்பதாகவும் குற்றம் சாட்டுகிறார் அத்வானி.

இது உண்மையா? உண்மைதான்; ஆனால் எப்போதும்போல அத்வானி பேசுகின்ற அரை உண்மை. பாரதீய ஜனதாவை சித்தாந்த ரீதியில் எதிர்கொள்ள மேற்சொன்ன கட்சிகள் அஞ்சுகின்றன என்பது உண்மைதான். மதங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்துவதாகப் பேசுவது மதநிறுவனங்களின் ஊடாக மக்களை ஒற்றுமைப்படுத்தும் அணுகுமுறையைக் கொண்டதுமாகும். ''மதம் என்பது தனிநபர் நம்பிக்கை - அதனை அரசு விவகாரங்கள் அனைத்திலிருந்தும் விலக்கிவிட வேண்டும்'' என்ற மதசார்பின்மைக் கோட்பாட்டுக்கு இது நேர் எதிரானது. மேலும் 'இந்துத்துவம்' என்ற போர்வையில் பார்ப்பன பாசிசம் தாக்குதல் தொடுக்கின்ற இன்றைய சூழலில் இந்துமதம் என்பதே பார்ப்பன மதம்தான் என்பதையும், இன்று இந்துக்களின் சார்பாகப் பேசும் பா.ஜ. கும்பல் இந்துக்களின் பிரதிநிதியல்ல என்பதையும் அம்பலப்படுத்துவது அவசியம் என்பதை நாம் ஏற்கனவே வலியுத்தியிருக்கிறோம். இத்தகைய தாக்குதலை முன்னெடுக்காமல் 'இந்துமதம் ஜனநாயகபூர்வமானது என்றும் பா.ஜ. அதற்கு எதிராகச் செயல்படுகிறது' என்றும் ஒரு கோமாளித்தனமான கோட்பாட்டை முன்வைத்து மார்க்கிஸ்டு கட்சி பிரச்சாரம் செய்து வருகிறது. மேலும் 'பார்ப்பன இந்துமதவெறி எதிர்ப்பு' என்று குறிப்பாகச் சொல்லாமல் பொதுவாக 'மதவெறி எதிர்ப்பு' என்றும் 'மனித நேயம்' என்றும் பேசுவது, தாக்குபவன், - தாக்கப்படுவன் ஆகிய இருவரையும் ஒரேதட்டில் வைத்துப் பார்க்கும் பித்தலாட்டமான அணுகுமுறையாகும். மொத்தத்தில் ''இந்து-இந்தி-இந்தியா'' என்ற கோட்பாடுடன் கருத்து ரீதியாகச் சமரசம் செய்து கொள்பவர்களும், 'நடைமுறைக் காரணங்களுக்காகவும், மக்களின் மனம் புண்படாமல் இருப்பதற்காகவும் தந்திரமாக அடக்கி வாசிப்பவர்களும், பாரதீய ஜனதாவுக்கு எதிரான போராட்டத்தில் வெறும் மண் குதிரைகளே.

பா.ஜனதா உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகளைத் தடை செய்யக் கூடாது என்றும் இன்று நாம் அவ்வாறு கோரினால் நாளை இதே ஆயுதம் நமக்கெதிராகப் பயன்படுத்தப்படும் என்றும், ''தடை செய்வதன் மூலம் அவர்களை முடக்கிவிட முடியுமா?'' என்றும் சில 'முற்போக்காளர்கள்' மடக்குகிறார்கள்; 'அவர்களோடு மோதி வெல்வதுதான் சரியான அணுகுமுறை' என்று தோள்தட்டுகிறார்கள். மேலும் புரட்சிகர மற்றும் இன விடுதலை இயக்கங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்ற நமது கோரிக்கை இதனால் தார்மீக பலமிழந்துவிடும் என அச்சுறுத்துகிறார்கள். மேல் பார்வைக்கு இது மிகவும் ஜனநாயக பூர்வமானவை போலத் தோற்றம் தரும் இந்த வாதங்கள் அபத்தமானவை, விபரீதமானவை.

முதலாவதாக, பா.ஜ. கட்சி மீதான தடையை நாம் கோருவதற்கு முன்னரே ஏற்கனவே பல்வேறு அமைப்புகள்மீது ஜனநாயக விரோதமாகத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இது இன்றைய அரசியல் சட்டத்தின் பேரால் செய்யப்பட்டிருப்பது, அதன் ஜனநாயக விரோதத் தன்மைக்கு ஒரு சான்று. மொழி, இன, வர்க்க ஒடுக்குமுறைகள் மட்டுமல்ல, மதசார்பற்றவர்களையும் பகுத்தறிவாளர்களையும் ஒடுக்குவதுடன், சாதி, சனாதன, ஆதிக்கத்தை அங்கீகரிப்பதுதான் இந்திய அரசியல் நிர்ணய சட்டம். இதன் அடிப்படையில்தான் வெளிப்படையான மதவெறிக் கட்சியான பா.ஜ.கட்சி சட்ட அங்கீகாரம் பெற்றுள்ளது. எனவே பா.ஜ. கட்சியின்மீதுதடையைக் கோருவது என்பது இன்றைய பிற்போக்கு அ.நி.சட்டத்திற்கெதிரான போராட்டமும் ஆகும். எந்தவொரு சட்டமாயினும் அதன் வர்க்கசாரத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதும், மாற்றுக்காகப் போராடுவதும்தான் புரட்சிகர அரசியல், இது சட்டவாதமல்ல; பாசிஸ்டுகளுக்கெதிரான நமதுகளப் போராட்டத்தை கைவிடுவதும் அல்ல. 'தடை' பா.ஜ.கும்பலின் செயல்பாட்டை முடக்குமா முடக்காதா என்பது இரண்டாம்பட்ச பிரச்சினை. தடை செய்யப்படாவிட்டால் பாசிசம் சட்ட அங்கீகாரம் பெற்றுத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் என்பதுதான் பிரதானமானது.

மேலும் 'ஆடுக்கும் ஜனநாயகம் புலிக்கும் ஜனநாயகம்' என்ற இந்த கோமாளித்தனமான கோட்பாடு யாருக்கு எதிரானது என்பதை விளக்கத் தேவையில்லை. இத்தகைய 'கைம்மாறு கருதா நண்பர்கள்' மூலம்தான் இட்லர் ஜெர்மனியில் அதிகாரத்திற்கு வரமுடிந்தது என்பது இங்கே நினைவுகூறத்தக்கது. தாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே ஜனநாயக சக்திகள் மற்றும் சிறுபான்மை மதத்தினர் மீது கொலை வெறித் தாக்குதல் தொடுக்கும் பாசிஸ்டுகள் வாயில் தேனொழுக இன்று ஜனநாயகம் பேசுவது, எதற்காக? தாங்கள் ஆட்சியைப் பிடிப்பதன் மூலம் பார்ப்பன பாசிசத்திற்கு சட்ட அங்கீகாரமும் அந்தஸ்தும் பெறுவதற்குத்தான். பா.ஜ.கும்பல் இதில் வெற்றியடைந்து விட்டால், அதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய இந்த 'நண்பர்களை' மக்கள் என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# பம்பாய் படுகொலை
# பார்ப்பன பயங்கரவாதம்

“கொழுந்து விட்டெரியும் தீயில் இரவு நேர வானம் கண்ணைக் கூசுகிறது. பகலோ புகை மூட்டத்தால் இருண்டு கிடக்கிறது.

“நான் வழக்கமாக நண்பர்களுடன் தேநீர் அருந்தும் இரானி தேநீர்க்கடையைக் காணவில்லை; ரொட்டிக்கடை கருகிக் கிடக்கிறது; பலகாலமாய்ப் பழக்கமான இறைச்சி வியாபாரியைக் காணவேயில்லை; அவர் உயிருடன் இருக்கிறாரா, இறந்துவிட்டாரா, ஓடிவிட்டாரா எதுவும் தெரியவில்லை. ஐயோ இது என்னுடைய பம்பாய் இல்லை” என்று கண் கலங்குகிறார் ஒரு சமூக சேவகர்.

ஜனவரி-7 முதல் 20 வரை, இரண்டு வாரகாலம் பிணந்தின்னிகளிடம் பம்பாய் ஒப்படைக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முஸ்லீம்களும், தமிழர்களும் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதுவரை சுமார் நான்கு லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர்; பம்பாயை விட்டு வெளியேறியுள்ளனர். பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன; எரிக்கப்பட்டிருக்கின்றன. உடல் ஊனமாக்கப்பட்டவர்கள் பற்றிக் கணக்கில்லை. இந்த மனிதப் படுகொலையை முன்னின்று நடத்திய சிவசேனா - ஆர்.எஸ்.எஸ். - பாரதிய ஜனதா கும்பல்கள் மீது இன்றுவரை தடையில்லை, கைது இல்லை, வழக்குகளும் இல்லை.

மாறாக, கீழ்க்கண்ட இரண்டாம்பட்ச காரணங்களையும் பொய்க் காரணங்களையும் முதன்மைப்படுத்தி பாரதிய ஜனதா - சிவசேனாக் கும்பலை தப்புவிக்கும் முயற்சி நடக்கிறது.

● நகரின் மையமான இடங்களின் உள்ள சேரிப் பகுதிகளிலிருந்து மக்களை விரட்டிவிட்டு அந்த இடங்களை ஆக்கிரமிக்க ரியல் எஸ்டேட் முதலைகள் செய்த சதி.

● வேகமான நகர்ப்புறமயமாதல் காரணமாக வளர்ந்து வரும் உதிரி வர்க்கமும், சமூக விரோதக் கும்பலும்தான் நிலைமை இவ்வளவு மோசமாகக் காரணம்,

● நாயக் அரசாங்கம் மா∴பியா கும்பல்மீது சமீபகாலமாகத் தொடுத்த கடுமையான தாக்குதலுக்கு அவர்கள் பழிவாங்கக் காத்திலிருந்து இதைச் செய்துவிட்டார்கள்.

● நாயக்கிற்கும் சரத் பவாருக்கும் இடையில் நிலவும் பகையில் நாயக்கைக் கவிழ்க்க நடந்த சதி இது.

இத்தகைய திசை திருப்பல்கள் ஒருபுறமிருக்க, “அயோத்தி பிரச்சினைக்கும் இந்தக் கலவரத்திற்கும் சம்பந்தமில்லை” என்று திமிர்த்தனமாக அறிவித்தார் கலவரப் பகுதிகளை 'பார்வையிட' வந்த அத்வானி. அடுத்த சில தினங்களின் பம்பாய் வந்த நரசிம்மராவ் இதை வழிமொழிந்தார்.

“இது பம்பாய்க்குள் ஊடுருவிய அந்நிய ஏஜெண்டுகளின் திட்டமிட்ட சதி” என்றார் அரசியல் 'சாணக்கியன்' ராஜாஜியின் வாரிசும் மகாராட்டிரத்தின் முன்னாள் ஆளுநருமான சி.சுப்பிரமணியம். முதல்வர் நாயக், தலைமைக் கொலைகாரன் பால் தாக்கரே ஆகியோரின் கருத்தும்கூட இதுவேதான்.

இந்தப் பொய்களை மறுத்துரைக்க புதிய ஆதாரங்கள் தேவையில்லை. பாதிக்கப்பட்ட மக்களும், உண்மையை உலகுக்கு அறிவிக்க முயன்ற பத்திரிகையாளர்களுமே இந்தப் படுகொலைக்கு சாட்சிகள்.

டிசம்பரில் மசூதி இடிக்கப்பட்டவுடன் நடந்து முடிந்த கலவரத்தைத் தொடர்வதற்கென்றே பாரதிய ஜனதா - சிவசேனா கும்பல் ஒரு புதிய வடிவத்தைக் கண்டுபிடித்தது. ஒவ்வொரு நாள் மாலையும் ஒவ்வொரு வீதியில் தனது குண்டர்களைக் கூட்டி 'மகா ஆரத்தி' என்று ஒரு புதிய 'பண்டிகையை' அறிமுகப்படுத்தியது. இந்தக் கொண்டாட்டங்களின்போது முஸ்லீம்களை இழிவுபடுத்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டதுடன் அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு மிரட்டும் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இந்த முழக்கங்களை ஒலிப்பதிவு செய்து, முஸ்லீம்கள் போலீசிடம் ஒப்படைத்த பின்னரும் போலீசு இதைத் தடை செய்யவில்லை.

தொழுகை நேரத்தில் பம்பாயின் மசூதிகள் சிலவற்றில் இடப்பற்றாக்குறை ஏற்படும்போது, சிலர் மசூதியின் வாயிலில் தெருவோரமாகத் தொழுகை நடத்துவதுண்டு. தான் மகா ஆரத்தி நடத்துவதற்கு இதையே காரணமாக் கூறியது பாரதிய ஜனதா - சிவசேனா கும்பல். உடனே தெருக்களில் தொழுகை நடத்தமாட்டோம் என்று முஸ்லீம்கள் தரப்பில் அறிவித்துவிட்டனர். ஆனால் மகா ஆரத்தி நிறுத்தப்படவில்லை; தொடர்ந்தது. ஒவ்வொரு நாளும் இந்த நிகழ்ச்சி நடைபெறும் இடம், நேரம் குறித்த அறிவிப்புகளை சிவசேனாவின் பத்திரிகையான 'சாம்னா' வெளியிட்டது.

கலவரத்தை எப்படியாவது தொடர்ந்தாக வேண்டும்; எரிகின்ற இந்து மதவெறித் தீயில் டெல்லி அதிகாரத்தை பிடுங்கிவிட வேண்டும் என்பதுதானே பா.ஜ. கட்சியின் நோக்கம். அதன் கூட்டாளியான சிவசேனாவுக்கு இன்னொரு தேவையும் இருந்தது - ஏற்கனவே மாநகராட்சி பதவியில் இருந்து கொண்டு கொள்ளையடித்த தனது பேட்டை ரவுடிகளுக்கு வருமானத்திற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும். பாது


படிப்பகம்

www.padippakam.com

காப்புப் பணம் என்கிற பெயரில் மக்களிடமும், வியாபாரிகளிடமும் மிரட்டிப் பணம் பறிக்க, கலவரம் ஒரு பயனுள்ள ஆயுதம்.

கலவரம் நடத்துவதற்கான எல்லா தயாரிப்புகளும் முடிந்த நிலையில் ஒரு மூகாந்திரத்தை மட்டுமே எதிர்பார்த்துக் காத்திருந்தது இந்து மதவெறிக் கும்பல். சுமை தூக்கும் தொழிலாளர்கள் இருவர் தொழிற்சங்கங்களுக்கிடையிலான தகராறில் கொலை செய்யப்பட்டனர். போலீசும் இவ்வாறுதான் வழக்கு பதிவு செய்துள்ளது. ஆனால் சிவசேனாவில் 'சாம்னா' பத்திரிக்கையும், 'நவகால்' என்ற ஆர்.எஸ்.எஸ்.சின் பத்திரிகையும் இதற்கு மதச்சாயம் பூசின. ஆங்காங்கே முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டனர். கொள்ளையடிக்கப்பட்டனர், 'மகா ஆரத்திகள்' தொடர்ந்தன

"நாடு முழுவதும் புரிந்து கொள்ளச் செய்வோம்" என்று தலைப்பிட்ட 'சாம்னா' பத்திரிகையின் தலையங்கத்தில் "அடுத்து வருகின்ற சில நாட்கள் நம்முடையவை" என்று கலவரத்தை அதிகாரபூர்வமாக அறிவித்தார் பால்தாக்கரே ரத்தமும், நிணமும், தீயும், புகையும், ஓலமும், அழுகுரலும் நிரம்பிய அந்த சில நாட்களை பம்பாய் நகரம், தான் தோன்றிய 300 ஆண்டுகளில் கண்டதில்லை.

●●●

கலவரம் தாறுமாறாக தன்னிச்சையாக நடக்கவில்லை. திட்டமிட்டு நடத்தப்படும் யுத்தத்தைப் போல நடந்தது. முன் இரவு நேரத்தில் கையில் நீண்ட கத்திகள், பிச்சுவாக்கள் மற்றும் கூர்மையான ஆயுதங்களுடன் ஒரு கும்பல் திடீரென்று கூடும். விகாரமான, வெறித் தமனான கூச்சல்களை எழுப்பியபடியே அந்தக்கும்பல் வீதிகளைச் சுற்றிவரும். மொழியோ பொருளோ இல்லாத வெறும் மிருகத்தனமான கூச்சலால் தமக்குத்தாமே வெறியூட்டிக் கொண்ட அந்தக்கும்பல் வீடுகளுக்குத் தீவைக்கத் தொடங்கும்; தப்பி ஓடுபவர்களை குத்திக் கொலை செய்யும். தீ முழுவதுமாகப் பற்றி எரிந்து அடங்கி மூங்கில்களும், இரும்பும் சூடாகி வெடித்துச் சிதறுகின்ற ஓசை கேட்கும் நேரத்தில் - நள்ளிரவில் - போலீசு வரும்; கைக்கு அகப்படுவோரை வண்டியிலேற்றிக் கொண்டு புறப்படும்.

அடுத்த சில நிமிடங்களில் மீண்டும் அந்தக் கூட்டம் கையில் ஆயுதங்களுடன் உலா வரும். இந்த முறை தங்கள் 'வெற்றியை' உறுதி செய்து கொள்வதற்கு. இத்தனைக்குப் பின்னரும் தப்பி ஓடாமல் முஸ்லீம்கள் யாரேனும் அந்த வட்டாரத்தில் இருந்தால் அவர்களுடன் 'இறுதி யுத்தம்' தொடங்கும்.

முதல் விசில் ஊதியவுடன் தாக்குதல் தொடக்கம்; இரண்டாவது விசிலுக்கு தாக்குதல் நிறுத்தம்; மூன்றாவது விசில் வந்தால் பின்வாங்குதல். முஸ்லீம் குடியிருப்புகள் தாக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் பின்பற்றப்பட்ட 'ஒழுங்கு முறை' இது.

மத்திய பம்பாயில் ஒரு மராத்திய நடுத்தரவர்க்க குடியிருப்புப் பகுதி. எஞ்சின் கோளாறு காரணமாக டாக்சியை நிறுத்தி விட்டு ஒரு பூட்டப்பட்ட கடையின் வாயிலில் அமர்ந்தார் அதன் ஓட்டுனர். யாரோ ஒருவர் வந்து அவருடைய பெயரைக் கேட்டவுடன் சகஜமாகச் சொன்னார் அந்த டிரைவர். அவருடைய பதிலே (அவருடைய முஸ்லீம் பெயர்) அவருக்க எமனானது. திடீரென்று முளைத்த ஒரு கும்பல் அவரை நாற்புறமும் கல்லால் அடித்தது. பிறகு டாக்சிக்குத் தீ வைத்து அவரைக் குற்றுயிராக அதில் தூக்கி எறிந்தது. கருகிப் போன அவரது உடல் இரவு வரை கேட்பாரின்றி சாலையிலேயே கிடந்தது.

இதே போல வழி மறித்துத் தாக்கப்பட்டு உயிர் ஊசலாடும் நிலையிலிருந்த இன்னொரு டாக்சி டிரைவரை புகைப்படம் எடுக்க முயன்ற 'இண்டிபெண்டெண்ட்' நாளேட்டின் நிருபரையும், அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு போக முயன்ற போலீஸ்காரரையும் விரட்டியது சிவசேனாக் கும்பல். சிறிது சிறிதாகத் துடித்து சாக விட்டு ரசித்தது.

முஸ்லீம் எதிர்ப்பு வெறியின் பயங்கரத்தை எடுத்துக்காட்டும் சம்பவங்கள் இரண்டைக் குறிப்பிடுகிறார் ஃபிரண்ட் லைன் இதழின் நிருபர்.

21 வயது நிரம்பிய ராம்பிரசாத் குப்தாவை வழிமறித்து நிறுத்தி பெயரைக் கேட்டது ஒரு கும்பல். பெயரைக் கூறியும் நம்பிக்கை ஏற்படாததால் தான் பணியாற்றும் நிறுவனம் அளித்துள்ள அடையாள அட்டையைக் காண்பித்தார் குப்தா. அதன் பிறகும் நம்பமறுத்த அந்தக் கும்பல் "நீ இந்து என்பதை நிரூபி" என்று கேட்டு அவரை நிர்வாணமாக்கியது.

சிறுவயதிலேயே மருத்துவக் காரணங்களுக்காக பிறப்புறுப்பில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் குப்தா. அதைக் கண்டவுடன் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாராக இல்லாத அந்தக் கும்பல் அவரிடமிருந்த பணத்தையும் வாட்சையும் கொள்ளையிட்டது. தப்ப முயன்ற அவரை குத்திச் சரித்தது.

ஜனரிவரி-10ம் தேதியன்று ஓர்லி பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்ட மனோகர் பொடேகர், கே.இ.எம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அறுவைசிகிச்சைக்காக ஆபரேசன் தியேட்டரின் வாயிலில் ஸ்டிரெட்சரில் கிடத்தப்பட்டிருந்தார். திடீரென்று அங்கே நுழைந்த 100 பேர் கொண்ட கும்பல்-மனோகரின் தாடியைப் பார்த்து அவரை முஸ்லீம் என்று முடிவு செய்து கத்தியால் சரமாரியாகக் குத்திவிட்டுச் சென்றது.

பம்பாய் நகர மேயர் சந்திரகாந்த் ஹண்டோரே சிவசேனா தலைவர் நவல்கருடன் தெருவில் நின்று 'நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவது பற்றி' பேசிக் கொண்டிருந்தார். சுற்றிலும் போலீசு பாதுகாப்பு.

அங்கிருந்து சில அடி தூரத்தில் சலவை நிலையம் ஒன்றின் கதவுகளை ஒரு கும்பல் உடைத்துக் கொண்டிருந்தது. "பயப்படாதே; பொறுமையாகச் செய்"

## 'சாம்னா' மூட்டிய தீ!

சிவசேனாவின் அதிகாரபூர்வ நாளேடான 'சாம்னா' வெளியீட்டையாகவே கலவரத்தைத் தூண்டியிருக்கிறது. செய்திகள், கட்டுரைகள் ஒருபுறமிருக்க பால் தாக்கரேயின் கையெழுத்திட்ட தலையங்கங்களே நேரடியாக வன்முறையைத் தூண்டின. ஒர்லி பகுதியில் 17 முஸ்லீம்கள் உயிருடன் எரிக்கப்பட்ட படத்தை வெளியிட்டு "17 மதவெறியர்களும் தீவிரவாதிகளும் எழுச்சி கொண்ட மக்களால் உயிருடன் எரிக்கப்பட்டனர்" என்று தலைப்பு வெளியிட்டது சாம்னா. ஆர்.எஸ்.எஸ்.ஸின் பத்திரிக்கைகளான தருண்பாரத், நவகால் ஆகியவை இந்துக்களைக் (குண்டர்கள் உள்ளிட்டு) குறிப்பிட தேசபக்தர்கள் என்ற சொல்லையும், முஸ்லீம்களைக் குறிப்பிட 'வெறியர்கள்' 'பயங்கரவாதிகள்' 'துரோகிகள்' என்ற சொற்களையே பயன்படுத்தியது.

"முஸ்லீம்களுக்கு எதிரான தர்ம யுத்தத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கான நினைவுச்சின்னம்" என்று பல இடங்களில் கட்அவுட்களையும் சிவசேனா நிறுவியது.

'முஸ்லீம்களுக்கு எச்சரிக்கை' என்று தலைப்பிட்டு ஜன. 11ம் தேதி 'சாம்னா' வில் தாக்கரே எழுதியது வருமாறு:

"போதும். வெறியர்களுக்கு உரிய இடத்தை நீங்கள் காட்டிவிட்டீர்கள். இனிமேலும் அவர்கள் நம்மிடம் வீராப்பு காட்டினால் அல்லாதான் அவர்களைக் காப்பாற்ற முடியும். சிவசேனைத் தலைவா என்ற முறையில் தேசபக்தர்களின் நலனை முன்னிட்டு இன்றுடன் கலவரத்தை நிறுத்திக் கொள்ள ஆணையிடுகிறேன். இந்த தருமயுத்தம் பம்பாயுடன் முடிவதல்ல. நாடு முழுவதும் நீங்கள் (முஸ்லீம்கள்) விலை கொடுக்க வேண்டிவரும்." கலவரத்தின் போது 3 லட்சம் பிரதிகள் விற்பனையான பத்திரிகை இது என்பதை வாசகர்கள் மறக்கக் கூடாது.

இதற்குப் பிறகு 15-ம் தேதி பம்பாய் வந்த நரசிம்மராவ் பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்கவில்லை. கவர்னர் மாளிகையில் தங்கியிருந்து சிவசேனா தலைவர்களைச் சந்தித்தார். முன்னதாக வந்த சவான், கவர்னர் மாளிகையை விட்டு வெளியே வரக்கூட இல்லை.

பம்பாய் கலவரத்தில் சிவசேனா முக்கியப் பங்கு வகித்திருப்பதாகத் தெரியவருவதால் அவர்கள்மீது வழக்கு தொடர்வது அல்லது தடை செய்வது பற்றி பரிசீலித்து வருவதாக பிப்ரவரி 26-ம் தேதி பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார் சவான். இந்தக் கொலை வெறியாட்டத்தில் காங்கிரஸ் அரசின் பங்கு என்ன என்பதை மேலும் விளக்க வேண்டுமா?

படிப்பகம்

www.padippakam.com



பம்பாய்: கொலை செய்யப்பட்டவர் - முஸ்லீம். கொலைக்குப் பயன்படுத்திய — ஆயுதம் அருகிலேயே. கொலையாளிகள்?

என்று அந்தக் கும்பலில் ஒருவன் மற்றவர்களுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்த இரண்டு காட்சிகளையும் ஒருங்கே கண்ட பத்திரிக்கையாளர்கள் ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பியபோது சிவசேனா தலைவர் வெகு நிதானமாகப் பதில் சொன்னார் 'மிகுந்த சிரமத்திற்கு இடையில் நிலைமையை நாங்கள் கட்டுப் படுத்தியிருக்கிறோம்.''

பிரதீட்சா நகர் - முஸ்லீம்கள் அதிகமாக வாழும் குடிசைப் பகுதி. 10-ஆம் தேதி இரவு முதல் அப்பகுதியில் இருந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தின் மேல்தளத்திலிருந்து ஹாலோஜன் விளக்குகள் குடிசைகள் மீது ஒளியைப் பாய்ச்சின. அங்கிருந்து ஆசிட் பல்புகளும், பெட்ரோல் குண்டுகளும் வீசப்பட்டன. இந்தக்கட்டிடத்தின் எதிரில்தான் போலீசு நிலையம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இரவு நேரமாதலால் விளக்குகள மூலம் செய்தி பரிமாறிக் கொள்ளப்பட்டது. டார்ச்சில் சிவப்பு விளக்கு எரிந்தால் ஒரு முஸ்லீம் வருகிறான் என்று பொருள். விசில் ஊதினால் 'தாக்கு' என்று பொருள்.

ஊரடங்கு என்பதெல்லாம் முஸ்லீம்களுக்கு மட்டும்தான். இதே பகுதியில் ஊரடங்கு அமலில் இருக்கும் நேரத்திலேயே மசூதிக்குள், ஒரு கும்பல் புகுந்து அங்கே தொழுகைக்கு அழைப்பவரை (ஆஸான்) உயிருடன் எரித்தது.

உடனே அப்பகுதியிலிருந்த முஸ்லிம்களை யெல்லாம் ஒரு வெட்ட வெளியில் இழுத்து வந்து உட்கார வைத்தது போலீசு. பசியாலும் தாகத்தாலும் தவித்த அவர்களில் ஒரு இளைஞன் தப்பிச் சென்று சமாதானக் கமிட்டியைச் சேர்ந்தவர்களுக்குத் தகவல் கூறினான்.

சமாதானக் கமிட்டி ஒரு ஜீப்பில் உணவுப் பொருட்களை அனுப்பியது. ஆனால் ஜீப்பை வழிமறித்து உணவுப் பொருட்களை எரித்தது சிவசேனைக் குண்டர்படை. ஜீப்பை ஓட்டி வந்த 'சம்ஷாத்' என்ற கமிட்டி உறுப்பினர் உயிர் தப்பி வந்து போலீசிடம் புகார் செய்தார். அதைக் காதில் போட்டுக் கொள்ளாத போலீசு அவரை சந்தேகிப்பதாகக் கூறி அவரையும் திடலில் இருந்த முஸ்லீம்களுடன் உட்காருமாறு உத்தரவிட்டது.

தாராவி, சிரா பஜார் பகுதிகளிலிருந்து உயிர் தப்பிய முஸ்லீம் குடும்பங்கள் பல போகுமிடமின்றி நாட்கணக்கில் கல்லறைகளிலும் சுடுகாட்டிலும் ஒளிந்து வாழ்ந்தன.

## அநாதைக் குழந்தைகளின் மதம் என்ன?

அநாதைக் குழந்தைகளுக்கான இல்லம் ஒன்றை நடத்தும் பம்பாய் அரசு அதிகாரி ஒருவரின் மனைவி கூறினார்: ''சிவசேனாக்காரர்கள் திடீரென உள்ளே நுழைந்தார்கள் ''இந்தக் குழந்தைகளில் யாரெல்லாம் முஸ்லீம் ?'' என்று கேட்டார்கள். இவர்கள் அநாதைக் குழந்தைகள், தயவு செய்து விட்டு விடுங்கள் என்று கெஞ்சினேன். அவர்கள் மறுபடியும் வருவோம் அப்போது பதில் சொல்லவேண்டும்' என்று மிரட்டி விட்டுப் போனார்கள்.

உடனே நான் முஸ்லீம் குழந்தைகளுக்கெல்லாம் இந்துப்பெயரைச் சொல்லிக்கொடுத்து கேட்டால் இதையே சொல்லுமாறு [illegible] பழக்கிவிட்டேன். இந்தச் சின்னஞ்சிறு வயதில் அவர்கள் மனதைக் கறைபடுத்த நேர்ந்ததை நினைத்து வேதனைப்படுகிறேன். ஆனால் அவர்கள் உயிரைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லையே'

முஸ்லீம்கள் அதிகமாக வாழும் ஜோகேஸ்வரி பகுதியில் நடந்த வெறியாட்டம் மிகக் குரூரமானது. பீதியில் உறைந்து போன மக்கள் வீடுகளை இறுகப் பூட்டிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே வராமல் இரவு முழுதும் விழித்திருந்தனர். தடதடவென்று ஒரு கும்பல் ஓடிவரும் காலடிச் சத்தம் திடீரெனக் கேட்டது.

தெருக்களுக்குள் நுழைந்த கும்பல் முன்னரே குறித்து வைத்திருந்த முஸ்லீம் வீடுகளை வெளிப்புறமாகப் பூட்டியது. கூரைமேல் ஏறிப் பிரித்த வீட்டுக்கு உள்ளே மண்ணெண்ணெயை ஊற்றி, சன்னல்களை உடைத்து மண்ணெண்ணெயில் தோய்த்த துணிப்பந்துகளை உள்ளே எறிந்து பின்னர் தீ வைத்தது. உள்ளேயே கருகிச் செத்தவர்கள் போக, தப்பி ஓடியவர்கள் குத்திக் கொல்லப்பட்டனர்; அடித்து தீயினுள் வீசப்பட்டனர்.

கிராபோர்டு மார்க்கெட்டில் உள்ள ஹஜ் பயணிகளுக்கான தங்கும் விடுதியில் 4000 அகதிகள் தங்கியுள்ளனர். சியான் பகுதியிலிருந்து குடும்பத்துடன் உயர்தப்பி வந்த சல்மா (நான்கு குழந்தைகளுக்குத் தாய்) ரோஷன் ஆகிய பெண்கள் கூறினர்: ''எங்கள் (இந்து - முஸ்லீம்) குழந்தைகள் ஒன்றாகத் தான் விளையாடும்; ரம்ஜானுக்கு அவர்கள் வருவார்கள்; அவர்கள் பண்டிகைகளுக்கு நாங்கள் போவோம்.... ஆனால் ஜனவரி 7-ம் தாக்குதல் தொடங்கிய போது முதலில் அவர்கள் எங்கள் கடைகளை எரித்தார்கள்; பிறகு எங்கள் வீட்டைச் சூறையாடி பொருட்களை வாயிலில் போட்டு எரித்தார்கள்;

''ஒரே நேரத்தில் நாங்கள் அவ்வளவு ஆயுதங்களைப் பார்த்ததுகூடக் கிடையாது. சில பெண்கள்கூட கையில் ஆயுதம் வைத்திருந்தார்கள். எங்கள் நகைகளைப் பிடுங்கித் தங்கள் பெண்களுக்கு அணிவித்தார்கள். கலகக்காரர்கள் எல்லாம் முகம் தெரியாதவர்கள் அல்ல; எங்கள் தெருவில் நாங்கள் பார்க்க வளர்ந்த பிள்ளைகள். அவர்களே எங்களைக் கற்பழிக்கவும் முயன்றதைத்தான் எங்களால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை'' என்று சொல்லிக் கதறினார்கள் ரோஷனும் சல்மாவும்.

கடைசியில் உயர்தப்பி ஓடும்போது ''ஒரேயடியாக பாகிஸ்தானுக்கு ஓடுங்கள். இல்லையேல் ஜோகேஸ்வரியில் நடந்தது தான் நடக்கும்'' (உயிருடன் எரிப்பது) என்று எச்சரித்திருக்கிறது பாரதிய ஜனதா - சிவசேனா குண்டர் படை.

மதவெறித்தாக்குதல் சிவப்பு விளக்குப் பகுதியையும் விட்டுவைக்கவில்லை. காமாட்டிபுரா, ஃபாக்லேண்ட் சாலை போன்ற 'பிரபல' சிவப்பு விளக்குப் பகுதிகளிலிருந்து சுமார் 10,000 பேர் (அதாவது 20%) வெளியேறிவிட்டனர். காட்கோபர் ரயில் நிலையத்திற்கு அருகில் இருந்த குடிசைகள் (சிவப்பு விளக்குப் பகுதி) முழுவதும் எரிக்கப்பட்டதால் 240 பெண்கள் ரயில் நிலையத்தில் தஞ்சம் புக நேர்ந்தது.

போலி கம்யூனிஸ்டுக்கள் மற்றும் தத்தா சாமந்த் போன்ற தனிநபர்களின் தொழிற்


படிப்பகம்

www.padippakam.com

சங்கங்கள் அனைத்தும் செயலிழந்துபோயின. லார்சன் அண்டு டுப்ரோ தொழிற்சாலையில் உள்ள சிவசேனாவின் 'தொழிற்சங்கம்' முஸ்லீம் தொழிலாளிகளை வேலையைவிட்டு ஓடுமாறு பகிரங்கமாக மிரட்டுகிறது. எப்படியாவது ஆட்குறைப்பை விரும்பும் நிர்வாகமோ "அவர்கள் உயிருக்குப் பயந்து வேலைக்கு வர மறுக்கிறார்கள். நாங்கள் என்ன செய்யட்டும்" என்று விளக்கம் சொல்கிறது. வேலை நிறுத்தங்களின் போது கருங்காலிகளைப் பாதுகாக்க நேரும்போது நிர்வாகம் இப்படிப் பதில் சொல்லுமா?

இதுவரை நடந்துவந்துள்ள வகுப்புக் கலவரங்களில், எப்போதுமே ஏழை எளிய முஸ்லீம்கள் மட்டும்தான் தாக்கப்படுவர். ஆனால் பம்பாய் கலவரம் பெரும் முஸ்லீம் வியாபாரிகளையும், பங்களாக்கள் மற்றும் அடுக்குமாடிகளில் (Flat) வாழும் மேல்தட்டு வர்க்க முஸ்லிம்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

மத்திய பம்பாய் பகுதியிலிருந்த முஸ்லீம் வியாபாரிகளின் மரக்கடைகள் எல்லாம் கொளுத்தப்பட்டுவிட்டன. மொத்த இழப்பு 150 கோடி ரூபாய் என்பது பம்பாய் மர வியாபாரிகள் சங்கத்தின் கணிப்பு.

"கணபதி விழாவிற்கு பந்தல் அமைக்க யாருக்கெல்லாம் இலவசமாக மூங்கில்கள் கொடுத்தேனோ அவர்கள் தான் என் கடைக்குத் தீ வைத்தார்கள்" என்று குமுறினார் முதியவரான ஜே.பி. பதான்வாலா என்ற பெரிய வியாபாரி. நட்டமான தொகையில் 25 சதவீதம் மட்டுமே இன்சூரன்ஸ் ஈட்டுத்தொகையாகக் கிடைக்கும்; எனினும் அதையும் தராமல் இழுத்தடிக்கிறது இன்சூரன்சு நிறுவனம். அதுமட்டுமல்ல, மீண்டும் தொழில் தொடர விரும்பும் முஸ்லீம் வியாபாரிகளுடைய கடைகளை இன்சூர்செய்யவும் மறுக்கிறது. இதன் பொருள் என்ன? "மீண்டும் முஸ்லீம் கடைகள் எரிக்கப்படாது என்பதற்கு உத்திரவாதம் இல்லை. எனவே, தெரிந்தே ஏன் நட்டப்பட வேண்டும்?" என்பதுதான் இன்சூரன்ஸ் நிறுவனங்களின் அணுகுமுறை.

இவை மட்டுமல்ல, மரச்சந்தையில் சுமை தூக்கும் தொழிலாளர்களாகப் பணியாற்றும் உ.பி.மாநிலத்திலிருந்து வந்த முஸ்லீம், இந்து கூலிகள் சுமார் 3000 பேர். பம்பாயை விட்டு ஓடிவிட்டனர். அவர்கள் திரும்பாமல் மரச்சந்தை இயங்குவதே சாத்தியமில்லை.

பம்பாயில் உள்ள ஏறத்தாழ 1100 ரொட்டி தயாரிக்கும் கடைகளில் 80% உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த முஸ்லீம்களால் நடத்தப்படுகின்றன. (சென்னையில் மலையாளி தேநீர்க்கடைகள் போல). அவற்றில் 300 பேக்கரிகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டு விட்டன இவற்றில் வேலைசெய்து வந்த சுமார் 50,000 முஸ்லீம் இளைஞர்களும், சிறுவர்களும் உ.பி.க்கு ஓடிவிட்டனர். கடும் உழைப்பாளிகளும், தொழில் தேர்ச்சி மிக்கவர்களுமான இவர்கள் திரும்பி வராமல் தொழிலே நடத்தவியலாது. மேலும் நூற்றுக் கணக்கான அப்பாவித் தொழிலாளிகளை

## ஒரு முஸ்லீம் முதியவரின் பிரகடனம்!

ஊரெங்கும் பதட்டம். வீட்டை விட்டு வெளியே வீட்டு சன்னல் வழியே தெருவைப் பார்த்த எனக்கு பகீரென்றது. எல்லாக்கடைகளும் மூடியிருக்கும்போது ஒரு முஸ்லீம் பெரியவர் கடையைத் திறந்து வைத்திருந்தார். அவருடைய தாடியையும் தொப்பியையும் ஒரு மைல் தூரத்திலிருந்து பார்த்தால் கூடத்தெரிந்துவிடும். "இந்த மனிதனுக்கென்ன கிறுக்கா? இதுவோ இந்துக்கள் பகுதி. மரணத்தை எவனாவது விலை கொடுத்து வாங்குவானா?" - முதலில் என் சிந்தனை இப்படித்தான் ஓடியது.

பிறகுதான் எனக்கு பளீரென்று புத்தியில் உறைத்தது. அவருக்கு சூழ்நிலை புரியாமல் இல்லை. கடையைத் திறந்து வைத்திருப்பதன் மூலம் இந்த இழிவான சூழ்நிலை பற்றிய உணர்வை அவர் மற்றவர்களுக்கு தோற்றுவிக்கிறார். "நான் இந்த நாட்டின் குடிமகன். முறையாகத் தொழில் செய்வது என் உரிமை. நான் முஸ்லீம் என்ற ஒரே காரணத்துக்காக யாராவது என்னை கொல்வார்களானால்... செய்யட்டும்" என்று அந்தப் பெரியவர் சொல்லாமல் சொல்கிறார். நானும் (இந்த இழிநிலை பற்றி) என் கருத்தை உடனே பிரகடனம் செய்ய வேண்டும் என்று இப்போது உணர்கிறேன்.

ஷைலேஷ் காந்தி, வர்த்தகர், சாந்தாகுரூஸ்

போலீசு பொய் வழக்கு போட்டு சிறையில் வைத்திருக்கிறது. அவர்களைப் பிணையில் எடுக்கக்கூட வசதியில்லாமல் தவிக்கின்றனர் கடை முதலாளிகள்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய குடிசைப் பகுதியான தாராவியில் இருந்த 4 லட்சம் முஸ்லீம்களில் 60% பேர் ஏற்கனவே வெளியேறிவிட்டனர். வீடுகளைப் பாதிக்கும் குறைவான விலைக்கு விற்று விட்டு பம்பாயை விட்டு ஓடுகின்றனர். முஸ்லீம்கள் அல்லாத தமிழர்கள், உ.பி.பீகார் மாநிலத்தர்கள் பலரின் நிலையும் இதுதான். சகஜநிலை திரும்பிவிட்டதாகக் கூறப்படும் இன்றைய நிலையிலும் ஒரு நாளைக்கு சராசரியாக 1000 பேர் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

தாராவியில் இருந்த 2000 தோல் பொருள் தயாரிப்பு தொழிலாளர்கள், 3600 ஆயத்த ஆடை தயாரிப்பு மையங்கள், 3000 எம்பிராய்டரி கூடங்கள் ஆகியவற்றில் 90% உற்பத்தி வீழ்ந்துவிட்டது.

மலபார் ஹில்ஸ், கஃபே பரேட், பெத்தார்ரோடு, பிரீச் கான்டி போன்ற மேட்டுக்குடி வர்க்கங்களுக்கேஉரிய பகுதிகளும் தாக்குதலிலிருந்து தப்பவில்லை. "உங்கள் வட்டாரத்தில் / கட்டிடத்தில் உள்ள முஸ்லீம்களின் பெயர்களைச் சொல்லுங்கள்" என்று அங்கிருக்கும் யாருக்காவது தொலைபேசியில் மிரட்டல் வரும். சொன்னாலும் சொல்ல மறுத்தாலும் பிரச்சினைதான். போலீசு மொத்தமாக செயலிழந்தும், சிவசேனாக்கு ஆதரவாகச் செயல்பட்டும் வந்த நிலையில் மேல்தட்டு வர்க்கம் அச்சத்தில் நிலைகுலைந்து போனது. விளம்பரத்துறையில் முன்னோடியான அலிக்பதம்ஸி என்பவருக்கு இத்தகைய தொலைபேசி மிரட்டல்

"இந்து-முஸ்லீம் மோதலாவது ஒன்றாவது? இத்தனை காலம் நாங்கள் சேர்ந்து வாழவில்லையா? இப்போது நாங்கள் சேர்ந்தே ஊரைவிட்டு ஓடுகிறோம். இந்தக் குண்டர்கள்தான் எங்கள் வாழ்க்கையை நொறுக்கி விட்டார்கள்"

*-ராஜேஷ், தையல்காரர் உ.பி.மாநிலத்தவர்*

வந்தவுடன் அவர் நேரே பால் தாக்கரேயைச் சந்திக்க ஓடினார் — செக் புத்தகத்துடன்.

கார்மிசல் ரோடு என்பது ஒரு சிறிய குன்றின்மீது அமைந்துள்ள பெரும் பணக்காரர் பகுதி. குன்றின் கீழே உள்ள குடிசைப் பகுதியில் முஸ்லீம்களின் வீடுகள் கொளுத்தப்பட்டதனால் அவர்கள் குன்றின் மேல் சென்று தஞ்சம் புகத் தொடங்கினர். "முஸ்லீம்களை எங்களிடம் ஒப்படைக்க வில்லையென்றால் உங்கள் கட்டிடங்களைக் கொளுத்தி விடுவோம்" என்று மிரட்டினர் சிவசேனா குண்டர்கள். அவர்கள் ஒப்படைக்க மறுக்கவே வீடு புகுந்து தேடப்போவதாக மிரட்டினர்.

அப்பகுதியின் பிரபல புள்ளிகள் போலீசுக்குப் போன் செய்தும் பயனில்லை. தாமதமாக வந்த போலீசு எதுவும் செய்யாமல் வந்தவழியில் திரும்பியது. பிறகு சரத்பவாருக்கு நெருக்கமான ஒரு நண்பர் மூலம் ஒரு "தனியார் துப்பாக்கிப் படை" தருவிக்கப்பட்டது. உடனே துப்பாக்கிச் சண்டை துவங்கியது. ஒரு சிவசேனா குண்டன் செத்தவுடன் அந்தக் கும்பல் கலைந்து ஓடியது.

ஆனால் அந்தப் பகுதியினர் அனைவருமே அடுத்த தாக்குதலை எதிர்பார்த்து பீதியடையத் தொடங்கினர். முஸ்லீம் பணக்காரர்களின் வீட்டு வாயில்களிலிருந்த பெயர்ப் பலகைகளை எடுத்துவிட்டு 'இந்து' பெயரை எழுதி மாட்டினர். பலர் உடனே வேறிடங்களுக்கு குடிபெயர்ந்தனர்.

பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரியான முஸ்லீம் ஒருவர் கூறினார். "யாருக்கும் சொல்லாமல் 12-ம் தேதி இரவு நாங்கள் வேறு இடத்துக்கு ஓடிவிட்டோம். 13-ம் தேதி காலை எங்கள் வீட்டின் முன் சிவசேனாக்காரர்கள் வந்து நின்றிருக்கிறார்கள். மயிரிழையில் தப்பினோம்".

நடுத்தர, மற்றும் மேல்தட்டு வர்க்க முஸ்லீம்களை மிரட்ட ஹிட்லர் கையாண்ட அதே பாணியை சிவசேனா கையாண்டது. சிவசேனா ரவுடிகள் தத்தம் பகுதியில் உள்ள முஸ்லீம்களின் வீட்டுச் சுவர்களில் பெயிண்டினால் அடையாளம் செய்தனர். தாக்குதல் நடத்தும்போது தங்களை அடையாளம் கண்டு கொள்ளாமலிருக்க பகுதிகளை மாற்றிக் கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



பம்பாய் ஹஜ் பயணிகள் விடுதி
இன்று 3000 அனாதைகளின் இல்லம்

கிறித்தவர்களையும் மிரட்டி வைப்ப தற்காக "கிறித்தவர்களுக்கு எச்சரிக்கை! முஸ்லீம்களுக்கு யாரும் அடைக்கலம் கொடுக்கக் கூடாது" என்று சிவசேனா ஆங்காங்கே தட்டிகள் வைத்தது.

● பீபி ஜான் என்ற பெண்ணின் கதை மிகவும் வேதனையானது. பெங்களூரிலிருந்து பிழைக்க வந்த பீபிஜான் முதலில் சிறிய அளவில் ஜரிகை வியாபாரம் செய்யத் தொடங்கினார். கணவன் பெட்டிக் கடை வைத்தார். பிறகு ஜரிகை வியாபாரத்தைத் தன் இரு மகன்களிடம் ஒப்படைத்து விட்டு தன் பெண்கள் மூவருடன் நடைபாதையில் தின்பண்டங்கள் விற்கத் தொடங்கினார். பிறகு ஒரு வீடு கட்டினார். உள்ளூர் செல்வாக்கின் காரணமாக கவுன்சிலர் தேர்தலிலும் போட்டியிட்டார்.

கலவரம் தொடங்கியவுடனே தங்கள் பகுதியில் - 'நாகபாடா - ஆயுதங்கள் சேகரிப்பவர்களைப் பற்றித் தகவல் கொடுத்து உடனே நடவடிக்கை எடுக்குமாறு போலிசிடம் வற்புறுத்தினார் பீபி ஜான். "உங்கள் சந்துக்குள்ளெல்லாம் என் வண்டி உள்ளே வரமுடியாது" என்று போலீசு அதிகாரிகள் திமிராகச் சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டனர். பீபி ஜான் எதிர்பார்த்து நடந்தது. அவருடைய வீடு சாம்பலாக்கப்பட்டது. விற்பதற்கு வைத்திருந்த 1.5 லட்சம் மதிப்புள்ள ஜரிகை, பெண்களின் திருமணத் துக்கு சேர்த்துவைத்த 16 தோலா தங்கம் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன. "பணம் காசு போனால் போகட்டும். என் கண் முன்னால், என் மகனை துண்டு துண்டாக வெட்டிக் கொன்றார்களே. அவர்களை நான் எப்படி மன்னிக்க முடியும்?" என்று கதறுகிறார் தற்போது குடும்பத்துடன் அகதி முகாமில் தஞ்சம் புகுந்திருக்கும் பீபி ஜான், நாடு முழுவதும் என்ன நடந்தாலும் தங்கள் ஊரில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்ததை அவர் நினைவு கூர்கிறார். ஆனால் தன் வீட்டில் விருந்து சாப்பிட்டவர்களும், கூட தாங்கள் தாக்கப்பட்டபோது குடும்பத்துடன் சேர்ந்து கொண்டதையும், தனக்கு நன்றாகப் பழக்கப்பட்ட சிறுவர்கள் வீட்டிலிருந்த ஆட்டுக் குட்டிகளையெல்லாம் பிடித்து வெட்டியதையும் அவரால் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

அகதிகள் முகாமிற்கு பார்வையிட வந்த கவர்னர் அலெக்சாண்டரிடம் அந்தத் தாய் கதறினாள். "எதைப் பார்வையிட வந்திருக்கிறீர்கள்? பிள்ளைகளை பலி கொடுத்த தாய்மார்களையா? விதவைகளையா? கல்லறைகளையா?"

## பத்திரிக்கையாளர் மீதும் தாக்குதல்

வானொலி, தொலைக்காட்சி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஆர்.எஸ்.எஸ். ஆதரவு ஏடுகளின் இருட்டடிப்புகளையும், மழுப்பல்களையும் மீறி கலவரம் பற்றிய செய்திகளை வெளிக்கொண்டுவர முயன்ற பத்திரிக்கையாளர்களும், முஸ்லீம் பத்திரிக்கை யாளர்கள் அனைவரும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

> இன்று அட்டூழியம் செய்யும் குண்டர்களையும் பொறுக்கிகளையும் காட்டிலும் உயர்ந்தவர்களாக நம்மை கருதிக்கொண்டிருக்கிறோமே. நாம் என்ன செய்தோம்? நம்முடைய முஸ்லீம் சகோதரர்களுடன் நாம் முழுமையாக ஒன்று கலக்காததுதான் நம்முடைய மிகப்பெரும் தவறு... நாம்தான் குற்றவாளிகள்.
>
> - ஷியாம் லால், துப்பரவுத் தொழிலாளி,
> பம்பாய் புறநகர் குடியிருப்பு

வாசில் அகமது கானும் அவரது மனைவியும் 'உருது டைம்ஸ்' பத்திரிகையில் பணியாற்றுபவர்கள்; தங்கள் மகளின் திருமண ஏற்பாடுகளுக்காக அவர்கள் வெளியில் சென்றிருந்தபோது அவர் வீடு சூறையாடப்பட்டது. 50,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. உருது டைம்ஸ் பத்திரிக்கையின் நிருபர்கள், புகைப்படக்காரர்கள் உட்பட அனைவரும் குறிவைத்துத் தாக்கப்பட்டனர்.

'மிட் டே' என்ற ஆங்கில மாலைத் தினசரியின் அலுவலகம் தாக்கப்பட்டது; நவபாரத் டைம்ஸ் நிருபர் அமின் குரேஷிக்குக் கொலைமிரட்டல் வந்தது; மாலைத்தினசரியான "ஹமாரா மகாநகர்" என்ற பத்திரிகையின் நிருபர் கத்தியால் குத்தப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார் - காரணம்? அத்வானியின் ரதயாத்திரையை அம்பலப் படுத்தும் "ராமனின் பெயரால்" என்ற ஆனந்த் பட்வர்த்தனின் படத்தை எதிர்த்து அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் வைத்திருந்த தட்டியின் வாசகங்களைக் குறித்துக் கொண்டிருந்தார் — விளைவு ஏ.பி.வி.பி. குண்டர்களால் குத்தப்பட்டார். பாரதிய ஜனதாவையும் சிவசேனாவையும் எதிர்த்து எழுதுகின்ற பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் பட்டியலிட்டுத் தாக்கப்பட்டனர். சென்ற முறை பம்பாய் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்திற்கு பாகிஸ்தான் வருவதை எதிர்த்து ஆட்டக்களத்தை சிவசேனை நாசம் செய்ததைக் கண்டித்து எழுதியதை நினைவில் வைத்து 'மகாநகர்' இதழின் நிருபர்கள் இருவர் குத்தப்பட்டனர்.

## "ஒருவர் கூட உதவவில்லையே"

கலவரத்தின்போது உருது பத்திரிகைகள் மிகவும் நிதானத்துடன் செயல்பட்டன. முஸ்லிம்களை அமைதியாக இருக்கச் சொல்லியும், பதட்டத்தைத் தணிக்க உதவுமாறு கோரியும் திரும்பத் திரும்ப எழுதின. அவை சற்று ஆத்திரத்துடன் எழுதியிருந்தால் நிலைமை மிகவும் விபரீதமாகியிருக்கும். இவ்வளவெல்லாம் இருந்தும் அவர்களை இந்து மதவெறிநாய்கள் விட்டு வைக்கவில்லை. 'உருது பிளிட்ஸ்' பத்திரிக்கையாசிரியர் ஹரூன் ரஷீதின் அனுபவம் மிகக் கொடூரமானது.

பிப்ரவரி 12-ம் தேதி இரவு 12 மணிக்கு தாக்குதல் தொடங்கியது. வீட்டு வாயிலில் நிறுத்தியிருந்த கார்களை அடித்து நொறுக்கிவிட்டுச் சென்றது ஒரு கும்பல். மறுநாள் காலை 10 மணிக்கு மீண்டும் தாக்குதல் தொடங்கியது. சுற்றியுள்ள வீடுகளின் மாடியில் ஏறி நின்றுகொண்டு ரஷீதின் வீட்டின் மேல் பெரிய கற்களையும், பெட்ரோல் குண்டுகளையும், திராவக பல்புகளையும் வீசினர் சிவசேனா காலிகள். வீடு பற்றியெரியத் தொடங்கியது. ஹரூன் ரஷீத் குடும்பத்துடன் உயிர் தப்பி ஓடினார். வீடு முழுவதுமாக எரிக்கப்பட்டது. இத்தனைக்கும் ஒரு பிரபல அகில இந்திய வார இதழின் ஆசிரியர் என்ற வகையில் அமைச்சர்கள், உயர் போலீசு அதிகாரிகள், ஏன் சிவசேனா தலைவர்களுடனும் கூட நெருக்கமான பழக்கம்

படிப்பகம்

www.padippakam.com

உள்ளவர் ரஷீத் என்பது குறிப்பிடத்தக்கது.

''நான் புகார் செய்யாதவர்கள் பாக்கி இல்லை. ஜனவரி-7ம் தேதி முதலே போலீஸ் பாதுகாப்பு கேட்டேன்; பய னில்லை. தெருவிலேயே நின்றிருந்த மத்திய ரிசர்வ் போலீசாரிடம் கேட்டேன்; பய னில்லை. அடிபட்ட மிருகத்தைப் போல நான் அங்கும் இங்கும் ஓடினேன். இந்த வீட்டில் பிறந்து வளர்ந்தவன் நான்; 65 ஆண்டுகளாக என்குடும்பம் இங்கேதான் இருக்கிறது; இருந்தாலும் நண்பர்களான என் அண்டை வீட்டுக் காரர்களில் (இந்துக் கள்) ஒருவர் எனக்கு உதவ வந்திருந்தாலும் எனக்கு ஆறுதலாக இருந்திருக்கும். வரவில்லையே. என்னுடைய நூல்கள், என்னுடைய டயரிகள் எல்லாம் எரிந்துவிட்டன. என்னுடைய 11 வயது மகன் பம்பாய்க்கு திரும்பவரமாட்டேன் என்று சொல்லிவிட்டான்; தன்னுடைய செல்வாக்கு மிக்க தகப்பன் ஒரு பிச்சைக்காரனைப் போல வீடுவீடாகப் படியேறிக் கெஞ்சுவதை அவன் பார்த்துவிட்டான். என் காயத்தின் தழும்புகள் நிச்சயம் ஆறாது'' என்று குமுறுகிறார் ரஷீத்.

### போலீஸ் - காக்கி உடை சிவசேனா

கலவரத்தை அடக்குவதில் போலீசின் பங்கு என்ன? இந்தக் கேள்வியை பாதிக்கப் பட்ட மக்களிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது வந்தபதில் ஒன்றுதான் ''கலவரத்தை அடக்குவதா? கலவரத்தை கூட இருந்து நடத்தியவர்கள் அவர்கள்தான்''.

இந்தக்கூற்று மிகையானதல்ல; ஒன்றிரண்டு அதிகாரிகள், குறிப்பாக முஸ்லீம் அதிகாரிகள் உண்மையிலேயே கலகக்காரர்களை அடக்க முனைந்தபோது அவர்கள் இந்துக்களை வேட்டையாடுவதாகவும், அந்நிய ஏஜெண்டுகள் என்றும் பெயர் குறிப்பிட்டு மிரட்டியது சிவசேனாவின் பத்திரிகை. அவர்களை உடனே மாற்றவில்லையென்றால் கலவரம்—தீவிரமாகும் என்றும் பகிரங்கமாக எச்சரித்தது.

''போலீசைப் பொருத்தவரை அவர்கள் ஒருகையில் துப்பாக்கியும் மறுகையில் சிவசேனாவின் பத்திரிகை சாம்னாவும் வைத்திருந்தனர். அவ்ர்கள் தங்களுக்கான உத்திரவுகளை 'சாம்னா' விடமிருந்து பெற்றனர்'' என்று அநேகமாக எல்லா பத்திரிகைகளும் பிரபல வழக்கிறிஞர் பல்கிவாலாவும் நேரடியாக குற்றம் சாட்டினர்.

வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வைக்கும் கும்பல் போலீசு வந்தவுடன் ஒரு 'பொய் ஓட்டம்' ஓடும்; அப்போது போலீசைப் பார்த்து அந்தக்கும்பல் கையசைப்பதும் போலீசு பதிலுக்கு கையசைப்பதும் பல இடங்களில் நடந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 90% முஸ்லீம்கள்; போலீசு புள்ளி விவரப்படி துப்பாக்கிச் சூட்டில் இறந்த 132 பேரிலும் 98 பேர் முஸ்லீம்கள் — என்றால் இதிலிருந்தே போலீசின் யோக்கியதையைப் புரிந்து கொள்ள முடியும்.

பிரதீட்சா நகரைச் சேர்ந்த அப்துல் ரகுமான் (60) சொன்னார்: ''1947-இல் பிரிவினையின் போது நடந்ததைவிடக் கொடூரமான கலவரம் இது. சாலைகளில் தடுப்புகளை ஏற்படுத்திவிட்டு எங்களை சிவசேனா குண்டர்கள் தாக்கினார்கள்; நாங்கள் ஓடும்போது துரத்தினார்கள். சாலைத் தடுப்பிற்கு அப்பால் நின்று போலீசு எங்களை சுட்டது. பின்னால் சிவசேனை - எதிரே போலீசு. நின்றாலும் சாவு; ஓடினாலும் சாவு



திருநெல்வேலியில் வந்து இறங்கும் பம்பாய் தமிழ (இந்து) அகதிகள்

''என் தம்பி வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தான், கதவைப் பூட்டவில்லை; உள்ளே நுழைந்த போலீசார் அவன் பெயரைக் கேட்டனர்; ''சாகித் அலி'' என்றான். உடனே நெஞ்சைக் குறிபார்த்து 3 முறை சுட்டுக் கொன்றனர். அவன் உடலைக்கூட எனக்குத் தர மறுத்துவிட்டனர்'' என்றார் இதே பகுதியைச் சேர்ந்த குல்முகமது என்ற கார்மெக்கானிக்.

கொள்ளையடிப்பதிலும், தாக்குவதிலும் போலீசு முன் நின்றதை பாதிக்கப்பட்ட முஸ்லீம்கள் பல்ர் நிவாரணக் குழுக்களிடமும், மனித உரிமைக் கழகங்களிடமும் புகாராகக் கொடுத்துள்ளனர். பல இடங்களில் ''ஓடடா பாகிஸ்தானுக்கு'' என்று சொல்லிச் சொல்லி போலீஸ் தாக்கியுள்ளது. ஒரு மசூதியையும், முஸ்லீம் குடியிருப்புகளையும்

> ''1984 இல் டெல்லியில் என்ன நடந்ததோ அதுதான் இப்போது பம்பாயிலும் நடக்கிறது. இரண்டிலும் இந்த அரசாங்கம் தான் குற்றவாளி. என் கடமையைச் செய்ய நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்''.
>
> *நந்த் சிங்(சீக்கியர்), பம்பாய் டாக்சி ஓட்டுநர் சங்க செயலர். ஏராளமான முஸ்லீம்களை டாக்சியில் அப்புறப் படுத்தி காப்பாற்றியவர்.*

கும்பலொன்று கொளுத்துவதாக. ஒரு போலீஸ்காரர் ஒயர்லெஸ்ஸில் தலைமையகத்திற்கு செய்தி கொடுத்து தீயணைப்பு மற்றும் போலீசு படையை கோரியபோது ''எரிந்தால் எரியட்டும்'' என்று தலைமையகம் பதில் கூறியதை, தான் ஒலிப்பதிவு செய்து வைத்திருப்பதாகக் கூறினார் ஒரு முஸ்லீம் பிரமுகர்.

● வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் தாதர் பகுதியில் நடந்த கலவரத்தை படமெடுக்க முயன்றபோது போலீசால் அடித்துவிரட்டப்பட்டார். மசூதியொன்றிற்குள் திமுதிமுவென நுழைந்த போலீசாரை படம் எடுக்க முனைந்த 'எகனாமிக் டைம்ஸ்' புகைப்படக்காரர் தடுக்கப்பட்டார். ''மசூதிக்குள் ஒளிந்திருக்கும் காஷ்மீர் பயங்கரவாதியைக் கைது செய்யத்தான் இந்த நடவடிக்கை என்றும்; இதைப் புகைப் படம் எடுக்கக்கூடாது'' என்றும் மிரட்டி திருப்பி அனுப்பப்பட்டார். ''நான் திரும்பி இரண்டடி வைப்பதற்குள் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது; ஒரு இளைஞனின் உடல் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டது'' என்றார் அந்த புகைப்படக்காரர்.

● இறந்தவர்கள் பற்றி போலீசு தரப்பில் கொடுக்கப்படும் புள்ளிவிவரங்கள் அனைத்தும் மோசடியானவை என்று பத்திரிகைகள் திரும்பத்திரும்ப நிரூபித்துவிட்டன. கூப்பர் அரசு மருத்துவமனையில் நியமிக்கப்பட்டிருந்த இரு போலீசாரை டைம்ஸ் ஆப் இந்தியா நிருபர்கள் விசாரித்த போது'' நாங்கள் பிணங்களை எண்ணுவதை நிறுத்திவிட்டோம்; பெயர் முகவரி எல்லாம் எங்கள் கைக்கு வந்ததை எழுதுகிறோம்'' என்றனர்.

கலவரம் தொடங்கிய சில நாட்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 34 என்று அறிவித்தார் போலீசு கமிசனர். மரணப்பதிவு அதிகாரியிடம இந்த விவரத்தை சரி பார்த்த போது அவர் சொன்னார்: ''சவப் பரிசோதனை செய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படம்:

## இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்ட இந்திய ராணுவ சிப்பாய்

ஜமாலுதீன்கான் - இந்திய ராணுவத்தின் 9 ஆண்டுகளாகப் பணிபுரியும் சிப்பாய். தன் தங்கைக்கு திருமண ஏற்பாடு செய்ய ஒன்றரை மாத விடுப்பில் பம்பாய் வந்திருந்தார். ஜனவரி 12-ம் தேதி நள்ளிரவு 300 பேர் கொண்ட கும்பலொன்று அவரது வீட்டைத் தாக்கியது. கதவை உடைக்க முடியாமல் போகவே, கூரையைப் (அஸ்பெஸ்டாஸ் தகடுகளை) பிரித்து உள்ளே குதித்தது அந்தக்கும்பல். தன்னந்தனியாக இருந்த அவரை தாக்கத் தொடங்கியது. "நான் ஒரு ராணுவ சிப்பாய்" என்று சொல்லிச் சொல்லிக் கதறியும் பயனில்லை. தங்கையின் திருமணத்திற்கு அவர் சிறுகச்சிறுகச் சேர்த்து வைத்திருந்த பணம், நகைகள், டி.வி. வீடியோ அனைத்தையும் திருடியது அந்த இந்துமதவெறிக் குண்டர்படை.

அடி தாளாமல் அவர் நினைவிழந்தார். அந்தக் கும்பல் வீட்டிற்குத் தீ வைத்துக் கொண்டிருந்தது. ஜமாலுதீன் உயிர் தப்ப ஓடினார். அனைத்தையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு தெருவில் நின்ற போலீசு, கும்பலை விட்டுவிட்டு ஜமாலுதீனை நோக்கி சுடத்தொடங்கியது. எப்படியோ உயிர் தப்பி பம்பாயிலிருந்த ராணுவமுகாம் ஒன்றிற்கு 3 நாட்களுக்குப் பின் போய்ச் சேர்ந்தார். போலீசில் வழக்கு பதிவு செய்ய ராணுவம் ஏற்பாடு செய்தது.

விடுமுறைக் காலம் முடிந்ததால் அவர் ராணுவ சேவைக்குத் திரும்பினார். "வழக்கு பதிவு" செய்த "குற்றத்திற்காக" இப்போது போலீசும் சிவசேனாவும் கூட்டாக ஜமாலுதீனின் குடும்பத்தைத் தாக்கத் தொடங்கினர். அது மட்டுமல்ல; பழைய முதல் தகவல் அறிக்கை போலீஸ் நிலையத்திலிருந்து காணாமல் போய்விட்டது. அதன் இடத்தில் புதிய பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது - இதில் பிரதான குற்றவாளி ஜமாலுதீன்.

நாட்டைக் "காப்பாற்ற" எல்லையில் பணிபுரிந்து கொண்டிருக்கும் ஜமாலுதீன், பம்பாயில் உள்ள தன் குடும்பத்தினரை எப்படியாவது காப்பாற்றுமாறு பத்திரிகையாளர்களிடம் தொலைபேசியில் கதறுகிறார். ஒரு ராணுவ வீரருக்கே இந்த நிலை என்றால் அப்பாவி முஸ்லீம் மக்களின் நிலை என்ன?

பிணங்களைின் எண்ணிக்கை இது இன்னும் 150 பிணங்கள் சவப் பரிசோதனை செய்யப்படாமல் இருக்கின்றன''

ஏராளமான பிணங்கள் ஈ மொய்த்து அழுகிக் கொண்டிருப்பதாகவும், அவற்றை எடுப்பதற்கு அனுமதிக்காமல் போலீசு மிரட்டுகிறது என்றும் கூறுகிறார் பிரதீட்சா நகரைச் சேர்ந்த உம்மி பீவி.

கொலைகள் அதிகரிக்க, அதிகரிக்க சவப்பரிசோதனை கூடத்திற்கு (மருத்துவமனைக்கு) அனுப்பாமல் நேரடியாக பிணங்களை சுடுகாட்டிற்கே அனுப்பத் தொடங்கியது போலீசு, தங்களுடைய சொந்த முயற்சியில் காயம்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்கள் பற்றிய விவரங்களை பத்திரிகையாளர்கள் சேகரிக்க முனைந்தபோதும் அதை எல்லா வகையிலும் போலீசு தடுத்தது. சிவசேனையின் சீருடை அணிந்த குண்டர்படையாகச் செயல்பட்ட போலீசிடம் வேறென்ன எதிர்பார்க்க இயலும்? ஊனமடைந்தவர்கள், இறந்தவர்கள் பற்றி அரசு தரும் புள்ளி விவரங்களும், அதனடிப்படையில் அறிவிக்கும் நிவாரணங்களும் அடுக்கடுக்கான மோசடி என்பதே உண்மை.

### தமிழகம், உ.பி, பீகார் 'இந்துக்கள்' மீதும் தாக்குதல்

கலவரத்தின் இலக்கு யார்? முஸ்லீம்கள் தான் என்பதில் ஐயமில்லை. கொலை செய்யப்பட்டவர்கள், காயமுற்றவர்கள், வீடிழந்து பம்பாயிலேயே அகதி முகாம்களில் இருப்பவர்கள், ஊரை விட்டு ஓடியவர்கள் ஆகிய அனைத்திலும் 80 முதல் 90 சதவீதம் பேர் முஸ்லீம்கள்தான். தேநீர்க் கடை வைத்திருக்கும் இரானியர்கள், ரொட்டிக் கடைத் தொழிலாளர்களான உ.பி. முஸ்லீம்கள். தோல் பதனிடும் தொழில் மற்றும் கூலி வேலை பார்க்கும் தமிழ் முஸ்லீம்கள், மரவியாபாரம் செய்யும் கேரள மாப்ளா முஸ்லீம்கள் — என்று இனம் மொழி எதுவானாலும் குறிவைத்துத் தாக்கப்பட்டவர்கள் முஸ்லீம்களே.

ஆனால் இந்தக் கொலைவெறி இத்துடன் நிற்கவில்லை; பம்பாயையை விட்டு ஓடிய தமிழர்கள் உள்ளிட்ட பிறமாநிலத்தினரில் ஏராளமானோர் 'இந்து'க்கள். மராட்டியரல்லாத பிறமாநிலத் தொழிலாளர் களையும் சிவசேனைக்காரர்கள் விட்டு வைக்கவில்லை என்கிறது டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டின் ஒரு செய்தி. முலுந்த், கோரேகான், மாதுங்கா போன்ற தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் கலவரமில்லாதபோது தாராவியில் மட்டும் ஏன் கலவரம் நடந்தத என்ற கேள்விக்கு பம்பாயிலிருந்து தப்பி வந்த தமிழர்கள் பதில் கூறுகின்றனர்.

### தமிழர்களை மோதவிட்ட இந்து முன்னணி

பிற-வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களைப் போல் அல்லாமல் தமிழர்களிடையே இந்து முஸ்லீம் பகைமை கிடையாது. ஆனால் தமிழர்கள் மத்தியிலும் இந்த நிலை தோன்றக் காரணம் இந்து முன்னணி.

தாராவியின் மக்கள் தொகை 5 லட்சத்துக்கும் மேல். ஒரு சதுர கிலோமீட்டருக்கு 17,676 பேர் என்பது பம்பாயின் சராசரி ஜன நெருக்கம். ஆனால் 1983 புள்ளி விவரப்படி தாராவியின் மக்கள் நெருக்கம் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 1,87,500 பேர்.

ஏற்கனவே தாராவியின் 6 கவுன்சிலர் பதவிகளையும் வென்றிருந்த சிவசேனை சமீபத்திய தேர்தலில் அனைத்தையும் இழந்தது. எனவே மதப்பகை மூலம் இழந்த செல்வாக்கைப் பெற திட்டமிட்டது இந்து முன்னணி - சிவசேனா கூட்டணி.

மசூதி இடிக்கப்பட்டவுடன் அதைக் கொண்டாட தாராவியில் ஊர்வலம் நடத்தியது இந்து முன்னணி. பின்னர் உள்ளூர் (தமிழ்) சாராய வியாபாரிகள், குண்டர்கள், சிவசேனைக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு கலவரத்திலும் இறங்கியது. இதில் முஸ்லீம்கள் மட்டுமல்லாமல் பா.ஜ.கும்பலுக்கு எதிராக இருந்த 'இந்து' தமிழர்களும் குறிவைத்துத் தாக்கப்பட்டனர்.

● பம்பாயை விட்டு சொந்த மாநிலங்களுக்கு ஓடிய 'இந்துக்கள்' பலர் (தங்களை போலீசு) தாக்கியதாகவும் கொள்ளையிட்டதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். குறிப்பாக முஸ்லீம்களைப் பாதுகாக்க முனைந்தவர்களை போலீசு வேட்டையாடியிருக்கிறது.

இந்தக் கலவரத்தில் இந்துக்கள் யாருமே முஸ்லீம்களால் தாக்கப்பட்வில்லையா. என்று சிலர் ஐயமெழுப்பக்கூடும், தாக்கப்பட்டனர். ஆனால் மொத்த சாவு எண்ணிக்கையில் அது 5% கூட வராது. முஸ்லீம் மதவெறி அமைப்புகள் செயல்பட்ட சில இடங்களில் மட்டுமே இத்தகைய தாக்குதல்களும் நடந்துள்ளன. இது பாரதிய ஜனதா - சிவசேனா குண்டர்கள் நடத்தும் கொலை வெறியாட்டம்தான் என்பதை முஸ்லீம் மக்கள் தெளிவாக உணர்ந்திருந்ததால், தாங்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் 'இந்துக்கள்' மீது இத்தகைய தாக்குதல்கள் நிகழ்ந்தபோது அவர்களைப் பாதுகாத்துள்ளனர்.

அதேபோல முஸ்லீம்களைப் பாதுகாப்பதற்குத் தங்கள் உயிரையும் கொடுத்த இந்துக்கள் பற்றிய செய்திகளும் வந்துள்ளன. ஆனால் மொத்தமாகப் பார்க்கும்போது கண்ணெதிரே நடைபெறும் அநீதியைக் கண்டும் மவுனமாக வெறும் பார்வையாளராக இருந்ததே பிரதானமான போக்காக இருந்துள்ளது. அடுத்து இந்து மதவெறியர்களின் பொய்ப் பிரச்சாரத்திற்கு பலியாகி இந்த வெறியாட்டத்தை ஆதரிக்கும் போக்கும் நடுத்தர வர்க்கம், கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு இருந்தது.

கலவரம் ஓய்ந்தபின் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து வந்து கொண்டிருக்கும் செய்திகள் மூலம் இந்தப் படுகொலையை எந்த அளவுக்கு திட்டமிட்டும் வெறித்தனமாகவும், பாசிஸ்டுகளுக்கே உரிய முறையில் சிவசேனா - பா.ஜ கும்பல் செய்துள்ளது என்பது அம்பலமாகிறது.

முஸ்லீம்கள் அதிகம் வாழும் பிரதீட்சா நகர் பகுதியில் வீட்டுவசதிவாரிய ஊழியர்கள் போலச் சென்று, (கலவரத்துக்கு சிலநாட்கள் முன்பு) முஸ்லீம்களின் வீடுகள் கடைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்திருக்கிறது சிவசேனா.

நடுத்தரவர்க்க இந்துக்கள் மத்தியில் முஸ்லீம் எதிர்ப்பு வெறுப்பை ஏற்படுத்த வதந்திகளை திட்டமிட்டே பரப்பியிருக்கிறது. ''முஸ்லீம்கள் பாலில் விஷம் கலந்து விட்டார்கள்'' என்ற வதந்தியை நம்பி பல ஆயிரம் லிட்டர்கள் பாலை பெண்கள் சாக்கடையில் கொட்டினர்.


படிப்பகம்

www.padippakam.com

''ஜோகேஸ்வரி பகுதியிலிருந்து முஸ்லீம்கள் கூட்டமாக வந்து திடிரென்று இரவில் தாக்க இருக்கிறார்கள்'' என்ற வதந்தியின் மூலம் நடுத்தர வர்க்கத்தினர் அனைவரையும் கையில் ஆயுதங்களுடனும் முஸ்லீம் எதிர்ப்பு வெறியுடனும் பலநாட்கள் இரவு முழுவதும் தத்தம் தெருக்களில் ரோந்து சுற்ற வைத்தது சிவசேனா. இதன் விளைவாக மத்திய பம்பாய் பகுதியில் காரில் வந்த ஓட்டல் ஊழியர்கள் மூவரை (ஒரு முஸ்லீம் இரண்டு பேர் இந்துக்கள்) என்ன ஏதென்று கேட்காமலேயே இவர்கள் அடித்துக் கொன்றனர்.

பாகிஸ்தானிலிருந்து ஏ.கே.47 துப்பாக்கி தாங்கிய முஸ்லீம்கள் படகில் வருவதாக 'சாம்னா' பத்திரிகை எழுதியது. கடற்கரையோரம் காரின் முன் விளக்குகளை கடலை நோக்கி எரியவிட்டவாறே பல நூறு கார்கள் கடற்கரையில் பல இரவுகள் நின்றன.

கலவரம் நடந்போதும் சரி, அதற்குப் பின்னரும் சரி மதசார்பின்மை பேசும் ஜனதா தளம், போலிகம்யூனிஸ்டுகள் மற்றும் பிற கட்சியினரும் அவர்களது தொழிற் சங்கங்களும் செயலற்று முடங்கிப் போயின என்பது வெட்கக் கேடான உண்மை.

## ஜனநாயகத்துக்கு ஒரு சவால்

மேற்கத்தியக் கல்வி, நாகரீகம், பல்வேறு நாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு இனங்கள் மதங்களைச் சேர்ந்த மக்கள் இணைந்து வாழ்வதால் தோன்றியிருக்கும் பொதுப்பண்பாடு ஆகியவை காரணமாக நடுத்தரவர்க்க அறிவு ஜீவிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் இந்தக் கொலை வெறியாட்டத்தைக் கடுமையாக எதிர்த்ததுடன், இந்தக் கொடுமைகளை உலகிற்கு வெளிக்கொண்டுவரவும், நிவாரண உதவிகள் சட்ட உதவிகள் செய்யவும் ,பெரும் அளவில் முயற்சித்து வருகிறார்கள்.

மேலும், லட்சக்கணக்கான தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள் வெளியேற்றம், தொழில் முடக்கம், சிறிய, நடுத்தர தொழில்கள் நாசமானதால் உற்பத்திச் சங்கிலி அறுபட்டு பெரும் தொழில்களும் பாதிக்கப்பட்டது, மொத்தத்தில் பொருளாதாரமே நிலைகுலைந்து போனது ஆகிய காரணங்களால் சில பெரும் முதலாளிகளும் 'குறைந்த பட்ச ஒழுங்கை' நிலைநாட்ட விரும்புகின்றனர்.

ஒப்பீட்டளவில் பழமை வாதப் பண்பாடும், பார்ப்பன பத்திரிகை ஆதிக்கமும் கொண்ட சென்னையிலோ அல்லது பிற பெருநகரங்களிலோ கூட பம்பாயைப் போன்றதொரு நிலை ஏற்படுமானால் இந்த அளவிற்காவது மதசார்பற்ற சக்திகள் செயல்பட முடியுமா என்பது சந்தேகமே. இந்து மதவெறிக்கெதிரான கருத்துப் போராட்டத்தையும், பிரச்சாரத்தையும் தீவிரப்படுத்துவது மட்டும் போதாது. கலவரங்கள் தூண்டப்படும்போது மத சார்பற்ற சக்திகள் கலவரத்தை ஒடுக்க போலீசுக்கும் அரசுக்கும் வேண்டுகோள் விடுவதில் பயனில்லை என்பது பல்வேறு கலவரங்களைப் போலவே பம்பாயிலும் மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே ஆயுதமேந்திய

### பொருளாதார இழப்பு
### புள்ளிவிவரம்

பம்பாயை குலுக்கிய பத்து நாட்களில் ஏற்பட்ட இழப்பு என்ன? இன்னும் முழுமையாக மதிப்பீடு செய்யப்படவில்லையென்றாலும் உத்தேசமாகக் கணக்கிட்டுக் கூறுகிறது ''டாடா பொருளாதார, புள்ளி விவர சேவை நிறுவனம்''

சொத்துக்கள் இழப்பு: ரூ 4000 கோடி
எரிக்கப்பட்ட வீடுகள்: 10,000
எரிக்கப்பட்ட வாடகைக் கார்கள்: 500
எரிக்கப்பட்ட லாரிகள்: 150
ஏற்றுமதி இழப்பு: ரூ 2000 கோடி
வீடிழந்தவர்கள்: 50,000

4 லட்சம் பேர் ஓடிவிட்டதாகவும், பம்பாய் அகதி முகாம்களிலேயே 40,000 இருப்பதாகவும் இன்னொரு புள்ளி விவரம் கூறுகிறது. சரி, கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? அரசு கணக்குப்படி 500 பேர். பத்திரிகைகளோ 1000 பேருக்கு மேல் என்கின்றன. கொல்லப்பட்ட உயிர்களின் பொருளாதார மதிப்பு? 500 X ஒரு லட்சம் = 5 கோடி ரூபாய். ஒரு லட்சம் என்பது அரசு நிவாரணத் தொகை. அப்படியானால் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ரொம்பவும் 'மலிவான' இழப்பு மனித உயிர்களின் இழப்புதான்.

இந்துமதவெறி மிருகங்களை மதசார்பற்ற சக்திகள் ஆயுதமேந்தி ஒடுக்குவது ஒன்றுதான் வழி, இல்லையேல் முஸ்லீம்கள் மட்டுமல்ல, மதசார்பற்ற ஜனநாயக வாதிகளும் ஆர் எஸ்.எஸ். குண்டர்களால் வன்மத்துடன் தாக்கப்படுவார்கள் என்பதையே பம்பாய் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

பம்பாயின் மக்கள் தொகை ஒரு கோடியே 26 லட்சம்; இதில் முஸ்லீம் மக்களின் எண்ணிக்கை சுமார் 14 லட்சம். நான்கு லட்சம் மக்களை இந்தக் கொலை வெறி நகரை விட்டு விரட்டியிருக்கிறது. அவர்களில் ஆகப் பெரும்பான்மையானோர் முஸ்லீம்கள். பிறந்த மாநிலத்தில் பிழைக்க வழியில்லாமல் பம்பாய் வந்தவர்கள் திரும்ப அங்கேயே திருப்பியடிக்கப்படுகிறார்கள். ''பிறந்த மண்ணிற்கு திரும்பிச்சென்று பட்டினியால் சாவதைவிட பம்பாயிலேயே போராடிச் சாவோம்'' என்ற நிர்க்கதியான நிலைதான் உழைக்கும் மக்களின் நிலை.

தாதர் பகுதியைச் சேர்ந்த மனோரமா என்பவரின் வீட்டில் வேலை செய்பவர் ஒரு முஸ்லீம் பணிப்பெண். கலவரம் ஓயும் வரையில் அந்தப் பணிப்பெண்ணின் 4 குழந்தைகளையும் தன் வீட்டில் விட்டுச் செல்லுமாறு சொன்னார் மனோரமா. அந்தப் பணிப் பெண்ணோ 12 குழந்தைகளுடன் வந்தாள். ''அக்கம் பக்கத்து வீட்டு குழந்தைகளையும் கூட்டமாக அழைத்து வந்திருப்பதைப் பார்த்தவுடன் அவர்களுக்கு ஏதாவது தின்பண்டத்தைக் கொடுத்து அனுப்பிவிடலாம் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் அந்தக் குழந்தைகளின் கண்களைப் பார்த்தபின் திருப்பி அனுப்ப எனக்கு மனம் வரவில்லை. சின்னஞ்சிறு குழந்தைகளின் கண்களில் அப்படிப்பட்ட பீதியை நான் இதுவரை சின்னஞ்சிறு குழந்தைகளின் கண்களில் அப்படிப்பட்ட பீதியை நான் இதுவரை கண்டதில்லை'' என்கிறார் மனோரமா. இந்த சின்னச்சிறு குருத்துகள் ஒரு முஸ்லீமின் வயிற்றில் பிறந்த ஒரே காரணத்திற்காக, பலிகடாக்களைப் போல ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை எதிர்நோக்கி நடுங்கத்தான் வேண்டுமா?

கலவரமெல்லாம் ஓய்ந்துவிட்டது என்ற நம்பிக்கையில் வீடு திரும்பினார் முகமதுரபி என்ற மீனவர். அவருடைய வீட்டில் பெரிய பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. ''இன்னும் உனக்கு இங்கே என்ன இருக்கிறது? ஓடுடா பாகிஸ்தானுக்கு'' என்று விரட்டியிருக்கின்றனர் சிவசேனைக் குண்டர்கள். தங்களுடைய ரத்தத்தாலும் வியர்வையாலும் பம்பாயை உருவாக்கிய ரபியைப் போன்ற உழைப்பாளிகளுக்கு பம்பாயில், ஏன் இந்த நாட்டிலேயே இடமில்லையா?

''நாங்கள் ஏன் பாகிஸ்தானுக்குப் போக வேண்டும், இந்த நாட்டில்தான் பிறந்தோம்; இங்கேயேதான் மடிவோம்'' என்று குமுறுகிறார் துணிக்கடை முதலாளியாக இருந்து இப்போது நிராதவராகத் தெருவில் நிற்கும் ஹுசேன் கதரி ''ஆனால் நாங்கள் எங்கள் பழைய வீட்டுக்குப் போக முடியாது; எல்லோரும் கலந்து வாழும் பகுதியில் எங்களுக்குப் பாதுகாப்பில்லை; நாங்கள் எங்கள் சனங்களுடன்தான் வாழமுடியும்''என்று குறுக்கிடுகிறார் ஒரு முஸ்லீம் பெண்.

''வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டுதான் அவர்கள் தாக்கினார்கள்; நாங்கள் இனிமேல் வாக்காளர் பட்டியலுக்கு பெயரே கொடுக்க மாட்டோம்'' என்கிறார் இன்னொரு பெண்.

''ஒரே இரவில் நாங்கள் பிச்சைக்காரர்களாகிவிட்டோம்; முஸ்லீம்களுக்கு உதவ யாருமில்லை — யாருமே இல்லையே'' என்று கதறுகிறார் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்து வந்த சாய்ரா.

சாதிக் மர்ச்செண்ட் என்பவர் முஸ்லீம் மக்களின் அவல நிலையை பிரதிபலித்தார் ''எங்கள் தலைவர்களிடம் எங்களுக்கு நம்பிக்கையில்லை; இந்த அரசாங்கத்திடமும் போலீசிடமும் நம்பிக்கை இல்லை; எங்கள் கடவுளை மட்டுமே நம்பியிருக்கிறோம்.''

சாதிக் மர்ச்செண்டின் வார்த்தைகள் நம்மை முகத்தில் அறைகின்றன, வெட்கித் தலைகுனிவோம்!

● சூரியன்

படிப்பகம்

www.padippakam.com




## அம்பேத்கர் அம்பலமாக்கும்

# 'கீதை ரகசியம்'

பகவத் கீதை பற்றி 'அது முட்டாள்களின் பிதற்றல்' என்றார் அம்பேதகார். அவர் மத்திய சட்ட அமைச்சராக இருந்தபோது அவ்வாறு சொன்னார் அந்த இடத்தில் இருந்துகொண்டு அவர் அவ்வாறு சொன்ன துணிச்சலை பெரியார் வரவேற்றார். ஏதோ போகிறபோக்கில் ஒரு வேடிக்கைக்காக அம்பேத்கார் அப்படிச் சொல்லவில்லை. இந்துத்துவ தத்துவம், பார்ப்பன இலக்கியங்கள், இந்துத்துவத்தின் விடுகதைகள் என்று அனைத்தையும் ஆழமாக ஆய்ந்த பிறகே, ஒரு கொதிப்போடுதான் அவ்வாறு சொல்லியிருக்கிறார்

மகாராட்டிர மாநில அரசு அம்பேத்கார் நூல்களின் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளது. தொகுப்பு 3-லிருந்து அவரது 'பகவத் கீதை' பற்றிய ஆய்வுரையில் சில முக்கிய அம்சங்களை இங்கே பார்க்கலாம். அம்பேத்காரால் அவரது காலத்திலேயே மதிக்கப்பட்ட கணித ஆய்வாளரும், வரலாற்றாய்வாளருமான டி.டி.கோசாம்பியின் 'பண்டைய இந்தியாவின் கலாச்சாரமும், நாகரீகமும்: ஒரு வரலாற்றுச் சித்திரம்' என்ற நூலிலிருந்தும் தேவையான சில ஆய்வகளையும் இங்கே இணைவாகத் தொகுக்கிறோம்.

★★

புத்தரது காலத்திய ஆரியசமூகம் வளர்ச்சிபெற்ற ஒழுக்கங்களைப் பெற்றிருக்கவில்லை. புத்தர் இதற்கெதிராகக் கலகம் செய்தார்; அன்றைய சமூகத்தை எதிர்தது சவாலாக ஒரு புதியசிந்தனையை, வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்கினார். வாழ்ந்துகாட்டினார்; புத்த மதத்தைப் பின்பற்றிய மன்னர்களின் ஆட்சியில் அவரது கொள்கைகள் சமூகத்தில் ஆழமாக வேர் பிடித்தன. மௌரிய ஆட்சி சரிவின்போது, பௌத்த கொள்கைகளால் தங்கள் நலன் பாதிக்கப்புட்ட பார்ப்பனர்கள் மௌரிய ஆட்சியின் அழிவுக்கு வேகமாக வேலை செய்தனர்; பஷ்யமித்ரன் என்ற சுங்க வமிச பார்ப்பன தலைமையில் இவ்வேலை நடத்தப்பட்டது; பார்ப்பனீயம் மீண்டும் ஆட்சிக் கட்டில் ஏறியது.

அந்த தருணத்தில், மறுஆட்சிக்கான தயாரிப்புக்கு பகவத் கீதையின் உருவாக்கம் உதவியது.

ஆரிய சமூகத்தின் தீமைகளாகப் பரவியிருந்தவை குடி, சூது, பாலியல் உறவு ஒழுக்கமின்மை ஆகிய மூன்றும். சோமபானம் பலிச்சடங்கில் பயன்படுத்தப்பட்டது; பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரியது; சுராபானம் பொது; பெண்களும் குடித்தார்கள்; சூதாட்ட அரங்கம் தனியாக அரண்மனையோடு இணைத்துக்கட்டப்பட்டது - நளன் நாடிழந்தான் யுதிஷ்டிரன் நாடு, உற்றார், ஐவரின் பொது மனைவி திரௌபதி எல்லாவற்றையுமே வைத்து இழந்தான். மணஉறவில் ஒழுக்கமில்லை: தந்தை மகளை மணந்தான்: பாட்டன் பேத்தியை மணந்தான்; மனு தன் பெண்ணான இலாவை மணந்தான்: தக்ஷன் தன் மகளை தந்தை பிரம்மனுக்கு மணம்கொடுத்தான்: யலாதி மன்னன் தன் மகள் மாதவியை காலவ முனிவருக்கு குரு தட்சணையாகக் கொடுத்தான். குரு அவளை மூன்று மன்னர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து பெண், பசுக்களைப்பெற்றான். அங்கங்கே குழந்தைகளைப் பெற்றுக் கொடுத்து எல்லாத்துன்பமும் அனுபவித்த மாதவி கடைசியாக விஸ்வாமித்திரனுக்கு மணமுடித்து அங்கும் குழந்தை பெற்ற பிறகு, காலவ முனிவழியாக அவள் திரும்ப தந்தையிடமே வந்துசேருகிறாள்.

இவைதவிர - ஆரியர்களின் மதத்தில் சடங்கும், பலியும் முக்கிய அங்கம் வகித்தன. பலியில் பசுவதை முக்கியமாக இருந்தது. பல்லாயிரக்கணக்கான பசுக்கள், எருதுகள், வெள்ளாடுகள், ஆட்டுக் குட்டிகள் ஒரே யாகத்தில் பலிகொடுக்கப்பட்டன. இதற்கான சடங்குகளே ரிக்வேதம் முழுக்கவும் நிரம்பியுள்ளன.

அந்த சமூகத்தில் புத்தர் முழுசீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். அன்பு, அறிவு

படிப்பகம்

இரண்டும் அவரது முக்கியப் போதனைகள். வேதத்தின் எல்லாம் வல்ல ஆதிக்கத்தை அவர் வெட்டிச்சாய்த்தார்; வேள்வி, யாகமே ஒரு மத என்ற வேத மதத்தை அவர் மறுத்தார் - வெட்டப்பட்ட ஆடுகள் சொர்க்கம் போகும் என்றால், பார்ப்பனர்கள் ஏன் தங்களையே பலிகொடுக்கக்கூடாது? புத்தர் வருணங்களை எதிர்த்தார்; அறிவைப்பொதுவாக்கினார்; பெண்களைச் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினார். அறிவை யாரும் யாரிடமிருந்தும் பறித்து, தடுத்து வைக்கக் கூடாதென்றார்.

> ''புத்தமதத்தைக் கண்டு பார்ப்பனக் கூட்டம் அஞ்சி நடுங்கியது; வெதும்பியது; சூழ்ச்சி செய்து மீண்டும் தங்கள் ஆட்சி கொண்டுவரத் துடித்தது; அதற்கான களத்தயாரிப்பிலும் இறங்கியது. மனுஸ்மிருதி அதற்கான சட்டவிதிகளைக் கொடுத்தது; பகவத்கீதை மீண்டும் வேதமத ஆட்சிக்கான தத்துவத்தைக் கொடுத்தது.''

இப்படிப்பட்ட புத்தமதத்தைக் கண்டு பார்ப்பனக்கூட்டம் அஞ்சி நடுங்கியது; வெதும்பியது; சூழ்ச்சிசெய்து மீண்டும் தங்கள் ஆட்சி கொண்டுவரத் துடித்தது; அதற்கான களத்தயாரிப்பிலும் இறங்கியது; மனுஸ்மிருதி அதற்கான சட்டவிதிகளைக் கொடுத்தது; பகவத்கீதை மீண்டும் வேதமத ஆட்சிக்கான தத்துவத்தைக் கொடுத்தது.

இந்து மதப்பாரம்பரியத்தின்படி, கீதை மகாபாரதத்தில் ஒரு பகுதி. இரண்டையும் எழுதியவர் வியாசர். வேறுபல புராணங்கள், பிரும்ம சூத்திரங்களையும் வியாசரே எழுதினார் என்பார்கள். இவற்றின் கால இடைவெளி பலநூற்றாண்டுகள் இருந்தாலும் எழுதியவர் ஒருவரே என்று அடித்துச் சொன்னார்கள். அதை மெய்என்று சொல்ல, ஞானிகளுக்கு மூப்பு, இறப்பு கிடையாது என்று புளுகினார்கள். ஆனால், உண்மையில், தங்கள் எழுத்துக்கு மதிப்பு கிடைப்பதற்காக பல ஆட்கள் தங்களை பெயரை வியாசர் என்று வைத்துக் கொண்டார்கள். ஆக, பாரதத்தில் ஒரு பகுதி தான் கீதை என்று வியாசர் பெயரை வைத்துக் கட்டப்பட்டகதை பொய்.

அதேபோல, மகாபாரதத்தில் கிருஷ்ணன் எங்குமே கடவுளாகக் காட்டப்படவில்லை. தவிர, கீதையில் வருவதுபோல பரமாத்மாவாக எங்குமே வரவில்லை. பாரதத்தில், கிருஷ்ணனை எதிர்த்து அவனது இழிவான குணங்களை விமரிசித்துக் கேவலப்படுத்துகிறார்கள் சிசுபாலனும், துரியோதனனும். அதனை அங்கீகரித்துப் பூமாரி பொழிந்து கின்னரர்கள் யக்ஷர்கள் வாழ்த்துகிறார்கள். மகாபாரதத்தில், ஓரிடத்தில் கிருஷ்ணனும் அருச்சுனனும் குடித்துவிட்டு விழுந்துகிடந்தார்கள் என்று வருகிறது. ஆனால், கீதை சாங்கிய யோகத்தில் ''மது என்ற அரக்கனைப் போக்கியவனும் எதிரிகளை ஒழித்தவனும் ஆகிய கிருஷ்ணா'' என்று அருச்சுனன் கிருஷ்ணனை அழைக்கிறான். எனவே இந்தக் கதைகளும் வேறுதான்; பாரதமும், கீதையும் சொல்லும் கிருஷ்ணனும் வேறுவேறுதான்.

இவைதவிர வேறுபல கிருஷ்ணன்களும் உண்டு. ரிக்வேதத்தின்படி, கிருஷ்ணன் ஒரு பேய், சாத்தான் - இந்திரனின் விரோதி. அதாவது, ரிக்வேதத்தின்படி இந்திரனே பெரிய கடவுள்; ஆரியகுடிகளில் ஒன்றான யதுகுலத்தின் கிருஷ்ணன் பரமாத்மா என்று எங்கேயும் சொல்லப்படவில்லை அப்படியானால், வசுதேவ - கிருஷ்ணன், உரலில் அகப்பட்டகிருஷ்ணன், மலையைக் குடையாக்கி ஆநிரை காத்தவன், காளியன் உச்சியில் நர்த்தனம் ஆடிக்கொட்டம் அடக்கியவன், கோபிகைகளுடன் காம - லீலைகள் நடத்தியவன், பிருந்தா - ராதா தவிர, பாமா - ருக்மணி தவிர, 16,108 'மனைவிகளை' அடைந்த கிருஷ்ணன் எல்லாம் ஒருவனா? வேறுவேறவா?

இத்தனை ஆயிரம் கதைகளும் வேறு வேறுதான். பிற்காலத்தில் எல்லாமே ஒன்று போல வரிசைப்படுத்தியிருக்க வேண்டும். ஆள் மட்டுமல்லாமல், காவியங்களையும் செருகிச்சேர்த்திருக்க வேண்டும்.

எப்படி இது நடந்தது? ஏன் நடந்தது? இரண்டு விளக்கங்களே சாத்தியமானவை. மத்தியகால சமுதாயத்தைக் கடந்து நிலவுடைமைச் சமுதாயம் உறுதிபடத் தொடங்கிய போது, ஆண்டைக்கு விசுவாசமாக அடிமைகள் நடக்கவேண்டும் என்ற கருத்து பொருள்பட, பக்தி விசுவாசத்துக்காக கிருஷ்ணன் என்ற ஒரே கடவுள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தகிருஷ்ணன் பல திருமணங்கள் செய்ததாகச் சொல்லப்படுவதற்கும் ஒரு காரணம் உண்டு. தந்தை வழிச் சமூக ஆரியச் சமூகமும், தாய்வழிச் சமூக முந்தைய பூர்வ குடிகளும் கலந்திருக்கின்றன. மனிதக் கூட்டங்களின் கலப்பை மக்களின் சிந்தனையில் உணர்த்த கடவுளர் திருமணங்களாக அவை காட்டப்பட்டு ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கவேண்டும். ஒரு கிருஷ்ணன் கதையாக்கப்பட்டபோது எல்லாக்கதைகளும் சங்கமித்திருக்க வேண்டும். இது ஒரு விளக்கம்.

எனவே கீதையின் பரமாத்மாவாக கிருஷ்ணன் மாறியகதை தனிக்கதையே.



கீதையும் தனிக் கதையே. பின்னால்தான் அவை ஒன்று சேர்க்கப்பட்டு மகா பாரதத்தில், சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

வேடிக்கை என்னவென்றால் - மகா பாரதமே பல நாடோடிக் கதைகளின் கூட்டுக் கதை; அதில் சேர்க்கப்பட்ட கீதைக்கும் பல ஒட்டுக்கள் உண்டு.

கீதை 4 தனித்தனி பாகங்களால் ஆனது.

ஒன்று: பழைய கீதை - ஒரு நாடோடிப்பாடல் - வீரன் அருச்சுனனைப்பற்றியது; தன் சொந்த உறவினர்களையே கொல்ல விருப்பமில்லாது தடுமாறி நிற்கும் அருச்சுனனைப் போரிடத்தூண்டுகிறான் கிருஷ்ணன்; வலிய போருக்குத்தள்ளுகிறான். அருச்சுனன் அதற்குப் பணிகிறான். இக்கதை அத்தியாயம் 1, 2, 11-ல் வருகிறது.

இரண்டு: மூல பகவத்கீதைக்கு முதல் ஒட்டு - கிருஷ்ணன் ஈஸ்வரன் என்று அறிமுகப்படுத்தப்படும் அத்தியாயம். இது பனிரெண்டாவது அத்தியாயமான பக்தியோகம்.

மூன்று: இரண்டாவது ஒட்டு - சாங்கிய, வேதாந்த தத்துவம் அறிமுகப்படுத்தப்படும் அத்தியாயம். அதாவது முன்னர் இல்லாத பகுதி; பூர்வமீமாம்சை என்றழைக்கப்படும் தத்துவவகைக்கருத்துக்கள் திணிக்கப்பட்டன பூர்வமீமாம்சையின் உள்ளடக்கம், பயன் எல்லாமே பழைய வேதச்சடங்குகளான யக்ஞ, யாகமே, யாகவிதிகள், தட்சணை, புரோகிதர்களுக்கு எவ்வளவு, எப்படிக்கொடுப்பது போன்ற ஏராளமான விதிகளே அவை. இந்தப்பகுதிக்கும், பழைய கீதையின் உரையாடல் உள்ளடக்கத்துக்கும் தொடர்பே இல்லை.

நான்கு: மூன்றாவது ஒட்டு - கிருஷ்ணன் என்ற நிலையிலிருந்து பரமேஸ்வரன் என்ற நிலைக்கு தூக்கிவைக்கும் இடம். இந்துக்கள் மத்தியில் கீதை மிகப்பெரிய, பிரும்மாண்டமான ஒழுக்க நன்நூல் என்று கருதப்படுகிறது. இதோ சில கேள்விகள்.

'கீதை போரை நியாயப்படுத்துகிறது': சொத்துக்களைப் பெறுவதற்காக மக்களைக் கொல்லும் போரை நடத்த வேண்டுமா? - இது அருச்சுனனின் நியாயமான கேள்வி. இதற்குப் பதிலாக, போரைப்பற்றியும், போரில் நடக்கும் கொலைகள் பற்றியும் தத்துவ விளக்கம் தருகிறான் கிருஷ்ணன். முதல்வாதம் - உலகில் பிறந்தவர் இறந்தே ஆகவேண்டும்; ஒருவன் இயற்கையாகச்

www.padippakam.com

சாகிறானா அல்லது கொல்லப்பட்டுச் சாகிறானா என்பதை அறிஞர்கள் பேதப்படுத்துவதில்லை. வாழ்க்கை நிலையானதல்ல எதற்காக சாவுக்கு அழவேண்டும்? இரண்டாவது வாதம் - உடலும், உள்ளமும், உடலும், ஆன்மாவும் ஒன்றல்ல; வேறுவேறு: உடல் அழிவது - ஆன்மா அழிவற்றது: ஒருவனைக் கொன்றால், உடல் மட்டுமே கொல்லப்படுகிறது. எனவே கொல்வது வெட்கப்படத்தக்க செயல் அல்ல.

கொல்வது, போரிடுவது சத்திரியரின் கடமை என்பதற்கான இந்த வாதங்கள் சிறுபிள்ளைத்தனமானவை; ஒரு கொலைகாரனுக்காக வாதாடும் வக்கீல் கீதையை மேற்கோள் காட்டி வாதாடினால் என்ன ...க்கும்? நிச்சயமாக, வக்கீல் ஒரு 'பைத்தியக்காரன்' என்று முடிவுகட்டி விடுவார்கள்.

**'கீதை நால்வருணத்தை நியாயப்படுத்துகிறது'**: நால் வருணங்கள் கடவுளால் உண்டானது, எனவே புனிதமான கட்டளை என்கிறது. கீதை, மனிதரிடம் உள்ள இயற்கையான குணங்களோடு ( சத்வம், ரஜஸ், தமஸ்- ஞானம், காமம், மந்தகுணம்) வருணங்களை இணைக்கிறது. முதல் கேள்வி: வருணங்களை நான்கு என்கிறாய்; ஆனால் குணங்களை மூன்று என்கிறாய்: மூன்று குணங்களுக்கு மூன்று வருணங்கள் என்றால், நான்கு வருணச் சமுதாயம் என்கிறாயே எப்படி? இரண்டாவது கேள்வி: மனிதர்களில் சிலரை கட்டளைபோடுபவர்களாக, எசமானர்களாக இருக்கக்கூடிய பண்புள்ளவர்களாகவும், மற்றவரை பணிந்து நடப்பவர்களாக, அடிமைகளாக இருக்கக்கூடிய பண்புள்ளவர்களாகவும் வருணப்பிரிவு போதிக்கிறது. இது எப்படிச்சரி? ஒருவரிடம் மட்டும் ஒருசில பண்புகளே மட்டுமே இருப்பதாகவும், மற்றவரிடம் அவை இல்லாததாகக் கூறுவதும் தவறு. தவிர, ஒரே மனிதரிடமே வெவ்வேறு பண்புகள் வெவ்வேற நிலைமைகளில் உண்டாகிறதே ஏன்? பணிவான, அடக்கமான ஒருவன் ஒருநாள் விழித்துக் கொள்கிறான். போராடுகிறான், தலைவனும் ஆகிறானே, அது எப்படி? எனவே சமூக சூழ்நிலைகள் அதற்குக் காரணமே அல்லாது பிறப்பே குணங்களைத் தீர்மானிக்க முடியாது. மூன்றாவது கேள்வி: நால் வருணத்தைக் கேள்வி கேட்கக்கூடாது: கலகம் செய்யக் கூடாது: கேள்விகேட்கவும் தூண்டக் கூடாது. பரமாத்மா மீது பக்திசெலுத்துவதால் மட்டுமே ஜீவமுக்தி (மனித விடுதலை) கிடைக்காது; பக்தியோடு, கர்மாவையும், வருணக்கடமையையும் செய்யவேண்டும். இது அவர்களின் வாதம் இதையே கேள்விக்குள்ளாக்குவது தானே அருச்சுனனின் முதல்கேள்வி? விளக்கம் சொல்லத் தெரியாத கிருஷ்ணன் அது கடவுளின் கட்டளை என்கிறான்: அடுத்து புத்திசாலியான அருச்சுனன் கேள்கேட்டுவிடக் கூடாதென்பதற்கா, அவன் வாயை அடைப்பதற்காக, 'நானே பரமாத்மா' என்று விஸ்வரூப தரிசனத்தைக் காட்டி பிரமிப்பூட்டி திகைக்கவைக்கிறான். கூடவே இருந்து, சூதுகளுக்கு வழிகாட்டி 'நண்பனாக' இருந்தவன், விரும்பியவளைத் திருமணம் முடிக்க வழிசொல்லிக் கொடுத்தவன், குடித்துக் கும்மாளம் அடித்தவன் திடீரென்று விஸ்வரூபம் காட்டினால் மலைப்பாக இருக்காதா?

### போலிகள்: ஏமாறாதீர்!

'இந்துத்துவத்துக்காக உன் உயிரையே கொடு!' என்று பலி பீடப் பூசாரி போல கட்டளை போடும் பி.ஜே.பி. தலைவர்கள் மக்களுக்கு சொல்லிக் கொடுப்பது: இந்து தர்மம், ராமநாமம், திரிசூலம். ஆனால் தங்கள் பிள்ளைகளுக்கு அள்ளித் தருவதோ, மேலை நாட்டு மோகம்: ஆங்கிலக்கல்வி.

எல்.கே. அத்வானி, கே.ஆர். மல்கானியின் பிள்ளைகள் டெல்லி 'மாடர்ன் பள்ளி'யில் ஆங்கிலம் வழி படித்தன; மதன்லால் குரானா மற்றும், கே.என். சாஹ்னியின் பிள்ளைகள் டெல்லி 'பாலபாரதி'யில் சொகுசான ஆங்கிலக் கல்வி படிக்கின்றன. பி.ஜே.பி. தலைவர் முரளி மனோகர் ஜோஷி வீட்டுப் பிள்ளைகள் செயின்ட் ஆண்டனி கான்வெண்டில் படிக்கின்றன. சிறுபான்மை மத நிறுவனங்களுக்கு சலுகைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று பிதற்றும் ஜோஷி எதற்காகத் தன் பிள்ளைகளை அங்கே அனுப்புகிறார்? தரமான படிப்புக்கா?

அருச்சுனன் கேள்விகளுக்கு கடைசி வரை கிருஷ்ணனிடம் பதிலே இல்லை.

**'கர்மமார்க்கத்தை கீதை நியாயப்படுத்துகிறது'**: வேள்வி யாகம் போன்ற நடைமுறைகளையே கீதை கோருகிறது. 'இதைச்செய்' என்று கிருஷ்ணபரமாத்மா சொல்வதை கண்ணை மூடிக்கொண்டு செய்தால் அது குருட்டுநம்பிக்கையல்லவா என்று ஒருவருக்கு சந்தேகம் வரும். அதற்காக, முதலில் அறிவைப்பெற்று அதற்குப் பிறகு கடமைசெய் என்று 'புத்தியோகத்தை'ப் போதிக்கிறது கீதை. அடுத்தது, கருமம் செய்வது சுயநலன் அல்லவா என்ற கேள்வி. எழக்கூடும் இதற்கும் ஒரு நொண்டிச் சமாதானம் வைக்கிறது கீதை. 'பற்றில்லாமல் கருமம்செய், பலனை எதிர்பாராதே.' முரண்பாடுகள், மோதல்கள், பிரச்சனைகளை நேருக்குநேர் காரணம் ஆய்ந்து தீர்ப்பதற்காக இறங்கச்சொல்லும் கர்மமார்க்கம் அல்ல கீதை. முரண்பாடுகளைத் தீர்க்க வழியில்லாமல், நோவே தெரியாமல், வலி அறியாமல் முழுங்கிக்கொள்ள வைக்கும் 'அனஸ்தீசியா' மயக்க மருந்தே கீதை.

சமாதானங்களை வலிய விலக்கிவிட்டுப் பார்த்தால் அப்பட்டமான பார்ப்பனச் சுயநலனுக்கான வேள்விச் சடங்கை நியாயப்படுத்தும் சூழ்ச்சி உள்ளே தெரியும்.

மகாபாரதம் வனப்பருவத்தில் 59-வது பாடல் இப்படிப்பாடுகிறது. ''விருசாலர்களால் அடக்கப்பட்ட பிராம்மணர்கள் பயத்தால் நடுங்குகிறார்களே! தங்களைக்காப்பாற்ற யாருமில்லாமல் வலியால் கதறி அழுது உலகம் பூராவும் அவர்கள் அலைவார்களே!'' 65,66,67- மூன்றுபாடல்கள் சொல்கின்றன: '' (இப்படியே போனால்) சமுதாயம் சிதைந்துவிடும். மக்கள் ஹைதுகர்களை (நாத்திகர்களை) வழிபடத்தொடங்குவார்கள். அவர்கள் கடவுளரை வெறுத்து ஒதுக்கிவிடுவார்கள். சூத்திரர்கள் இருபிறப்புள்ள பிராமண, சத்திரிய, வைசியருக்கு ஊழியம் செய்யமாட்டார்கள். மொத்த உலகத்திலும் ஹைதுகர்கள் சூழ்ந்து விடுவார்கள்; யுகம்முடிந்துபோகும்'' இவற்றின் பொருள் என்ன? வருணங்கள் அழிந்தால் பார்ப்பன ஆதிக்கம் பறிபோய்விடும். அதுதானே?

கீதை முதல் அத்தியாயம் (அர்ஜுன விஷாத யோகம்) 40 - 43 பாடல்களில் அருச்சுனன் கேட்கிறான்: ''(எதற்காக இந் தப்போர்! குலம் நாசம் அடையுமே?) குலம் நாசமடையும் போது தொன்று தொட்டு வந்த குல தருமங்கள் நாசமடையும்; தருமம் அழிந்தால், குலம் முழுவதும் அதருமம் பரவி நிற்கும். கிருஷ்ணா! அதருமம் பரவுவதால், குலப்பெண்கள் கற்பை இழந்து கெட்டுப்போவர்; கிருஷ்ணா! பெண்கள் கெட்டால் வர்ணக் கலப்பு ஏற்படும். வர்ணக் கலப்பு, குலத்தை நாசம் செய்தோருக்கும் நாசமடைந்த குலத்துக்கும் நரகத்திற்கே காரணமாகும் அன்றோ!'' இதன்பொருள் என்ன? வர்ணக்கலப்பு ஏற்பட்டால், தருமமும் வேதங்களும் அழியும், அவர்களின் பிழைப்பும் போய்விடும். அதுதானே?

ஆக, மகாபாரதம், கீதை இரண்டிலும் சொல்லப்படும் செய்தி ஒன்றுதான்

ஒரேவரியில் சொல்லப்போனால், புத்தமதம் பரவுவதற்கு எதிராக, பார்ப்பனீய வேதமத ஆட்சியை வலுப்படுத்தவே கீதை உருவாக்கப்பட்டது: இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நாட்டு விடுதலைப் போரின் போதும், இந்துமத அடிப்படையில் ஆட்சியை மீட்கவே கீதைக்கு மறுபடி மறுவிளக்கம் தரப்பட்டது: இந்து தேசியம் பிரபலமாக்கப்பட்டது. இன்று மீண்டும் 'இந்துத்துவ' த்தைத் தோண்டி எடுத்து அலங்காரம் செய்து கொண்டிருப்பவனும் அதையே சொல்கிறான்.

ஏப்ரல் 1 முதல் தொலைபேசியில் குறிப்பிட்டநேரத்தில் குறிப்பிட்ட எண்ணைச் சுழற்றினால் சங்கரனின் (ஓடிப்போனவாள்) குரலிலேயே கீதோபதேசம் கேட்கலாம் என்று அறிவித்திருக்கிறது சங்கரமடம். 'உன் வருணத்தகுதியை மீறாதே' என்றான் ராமன்; 'உன் (வருணக்)கடமையைச் செய்' என்றான் கீதையின் கிருஷ்ணன். 'டேய், சூத்திரா, உன் கடமையைச் செய்' என்று சங்கரமடப் பார்ப்பான் கீதோபதேசம் செய்வதைக் கண்டு சகித்துப் பொறுத்துக் கொள்ளப்போகிறோமா?

'முட்டாள்களின் பிதற்றல்களை' புளுகுமூட்டைகளைச் சுமந்து கொண்டே மானமழிந்த தமிழர்களாக வாழவேண்டுமா?

● **வேலாயுதம்**

படிப்பகம்

www.padippakam.com

ராசேந்திரன் - வயது 35. பம்பாயில் பிறந்து பம்பாயிலேயே வளர்ந்த தமிழர். மராட்டிய மாநில அரசில் துணை தாசில்தார். பம்பாய் தமிழ்ச்சங்கத்தில் பொறுப்பில் உள்ளவர். இந்து முன்னணித் தமிழர்கள் சிவசேனையுடன் சேர்ந்து கலவரத்தைத் தூண்டியபோது அதை எதிர்த்தவர். மதக் கலவரத்தைத் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டவர். தன் தலைக்கும் குறி வைத்துவிட்டார்கள் என்று தெரிந்து இரவோடிரவாக குடும்பத்துடன் பம்பாயை விட்டு வெளியேற முயன்றபோது. ஒரு மருதிக்குள்ளிலிருந்து நூற்றுக்கணக்கில் வழிமறித்துக் கொண்ட சிவசேனா குண்டர்கள் மனைவி, சகோதரி, தந்தை, மூன்று பிள்ளைகள், பிறந்து நான்கே நாள் ஆன கைக்குழந்தை, அவர்கள் சென்ற வேனை ஓட்டிச் சென்ற ஓட்டுனர் ஆகிய அனைவரையும் வண்டியுடன் எரித்துக் கொன்றனர். முன்னால் ஒரு காரில் சென்று கொண்டிருந்த ராசேந்திரனும் அவருடைய வீட்டுப் பணிப்பெண் மீராவும் (மலையாளி) இதைக் கண்டு பதறி ஓடிவந்தபோது அவர்களும் தாக்கப்பட்டனர். ராசேந்திரன் மீது விழுந்த கத்திக்குத்துகளை தடுத்து மீரா வாங்கிக் கொண்டாள். இரும்புத் தடிகளால் தாக்கப்பட்ட ராசேந்திரனின் சிறுநீரகமும், பார்வை நரம்புகளும் பாதிக்கப்பட்டு பார்வை இழந்துள்ளார்.

சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருக்கும்போதே ஜோலார்பேட்டையில் மீரா இறந்து போனாள்: மீராவின் பிணத்துடன் ராசேந்திரன் கையிலிருந்த மோதிரம், கடியாரத்தையும் தமிழக போலீசு பிடுங்கிச் சென்றது.

கண்ணுக்கு மருத்துவ சிகிச்சை கோரிய ராசேந்திரனை சிகிச்சை தராமல் இழுத்தடித்து நோகடித்தனர் அதிகாரிகள். ஆத்திரம் கொண்ட ராசேந்திரன் ''தான் ஒரு பம்பாய் தமிழ் அகதி'' என்று எழுதி வைத்துக்கொண்டு வால்பாறையில் தமிழ்மக்களிடம் உதவி கேட்டபோது 'பிச்சையெடுத்த குற்றத்திற்காக' கைது செய்யப்பட்டார். 'அண்ணா சமாதியின் முன் தீக்குளிப்பேன்' என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டதற்காக கோவை சிங்காநல்லூர் எம்.எல்.ஏ. யின் ஆட்களால் மருத்துவமனையில் வைத்தே தாக்கப்பட்டார்; ''நீ நக்சல்பாரிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறாயா?'' என்று 'கியூ' பிரிவு போலீசாரால் விசாரிக்கப்பட்டார்.

இத்தனைக்கும் பிறகு ராசேந்திரன் கேட்டார்: ''மருதிக்குள்ளிலிருந்து வெளியே வந்து தாக்கினார்களே சிவசேனா குண்டர்கள். உள்ளேயிருந்த முஸ்லீம்களின் கதி என்ன? நான் எம்.ஏ. படித்தவன்; எனக்கே தமிழகத்தில் இந்தக்கதி என்றால் படிப்பறிவில்லாத தமிழ் மக்கள் 36,600 பேர் தமிழகம் வந்திருக்கிறார்களே அவர்கள் கதி என்ன? (தமிழக அரசு 600 பேர் மட்டுமே என்று கூறுவது பொய் என்கிறார் ராசேந்திரன். வெளியேறுபவர்களைக் கணக்கிடும் பொறுப்பில் தான் இருந்ததாகவும் கூறுகிறார்) என்னைக் காப்பாற்றி தமிழகம் கொண்டு வந்து சேர்த்த மூன்று முஸ்லீம் தாய்மார்களின் கதி என்ன? தமிழ் மக்கள் காட்டும் மவுனத்தின் பொருள் என்ன?''

# பெருங்காயம் வாழ்ந்த பாண்டமே பெருமையில் உறங்கு!

● மருதையன்

உணர்ச்சிகள் பொருட்களல்ல,
உடனே பெயரிட்டு அழைப்பதற்கு.

சொற்களைத் திமிரும் படிமங்களும்
விவாணையை மறுக்கும் உணர்ச்சிகளும்
உண்டு உண்டு.

அவற்றைப்
பகிர்ந்துகொள்ள இயலாவிடினும்
தெரிவித்தாக வேண்டும்.
கண்ணீராக, குமுறலாக, வசவாக
எப்படியோ
தெரிவித்தாக வேண்டும்.

இல்லையேல்
நானும் சவமாவேன்.

●

பனி உறையும் மலரையும்
சூடான குருதி உறையும்
வாளையும் - கண்டு
சமமான வியப்புடன் விரியும்
மழலை விழிகளை, இதழ்களை

ஒரு மனிதனால்
பொசுக்க இயலுமா?

கண்களில் நீர் ததும்ப
உதடுகள் பிதுங்க
அச்சத்துடன் ஏறிடும்
குழந்தையின் குரல்வளையை

மனிதக் கரங்களால்
நெரிக்க முடியுமா?

நான் நம்பத் தயங்கியதுண்டு.

இப்போது அச்சத்துடன் நம்புகிறேன்

பம்பாயின் கதறலைக்
கேட்டதனால் அல்ல
அதைக் கேட்க மறுக்கும்
செவிட்டூமையை - தமிழகத்தைப்
பார்த்த பின்னால்
நம்புகிறேன.

நள்ளிரவு பனிரெண்டு மணிக்கு
இரவில் அமைதியைக் கிழித்து
ஒரு கரைவேட்டி முழங்குகிறது:

தமிழகமே நன்றி சொல்
இந்த அமைதியை
உனக்கு அருளிய
பெரியாருக்கு நன்றி சொல்''

பம்பாயில் ஊரடங்கு
சூரத்தில் ஊரடங்கு
கல்கத்தாவில் ஊரடங்கு
திருவனந்தபுரத்தில் ஊரடங்கு
தமிழகத்தில் .... அமைதி

பேருந்துகள் ஓடுகின்றன
திரையங்குகள் திணறுகின்றன
கடைவீதிகள் குதூகலிக்கின்றன

ஆடுகள் 'சுதந்திரமாக' மேய்கின்றன
ஓநாய்களும் சுதந்திரமாக
நோட்டம் பார்க்கின்றன
எனினும் 'அமைதி' குலையவில்லை.

ஆம்!
பெருங்காயம் வாழ்ந்த பாண்டமே!
பெருங்காயத்திற்கு நன்றி சொல்
பூச்சிகள் உன்னை அண்டமுடியாது
நமது சின்னம் பெருங்காயம்!

கம்பீரமான பிரகடனங்கள்!
கிறங்கச் செய்யும் சொற்சிலம்பங்கள்!

உண்மையா?
ஊமையின் அமைதி ஞானமா?
கோழையின் அமைதி விவேகமா?

தமிழகமே
உன் மவுனத்தின் நிறம் இதுதானா?

நம்பியிருப்பேன் ...
ராசேந்திரனை
சந்திக்காமலிருந்திருந்தால்

●

ராசேந்திரன்
வயிற்றுக்காக பம்பாய் சென்று
இதயத்தைத் தேடி
தமிழகம் திரும்பியவர்

தாய் தந்தை
உடன் பிறந்தவள்
மனைவி
மூன்று மழலைகள்
அனைவரும்
அவர் கண்முன்னே
எரிக்கப்பட்டனர்.

பாரதிய ஜனதாவும்
சிவசேனாவும்

படிப்பகம்

www.padippakam.com

மூட்டிய
ஒருமைப்பாட்டு வேள்வியில்
அவர்கள் எரிக்கப்பட்டனர்

கனவுகளைக் கருக்கும்
இந்தநாட்டில்
நனவும் சாம்பலானது.

'தன்னுடைய சாம்பலை'த் தன்
கண்முன்னே கண்டபின் - அவர்
கண்களையும் பிடுங்கினர்.

மனக்கண்ணில் உறுத்தும்
சித்திரத்தை - என்னிடம்
சித்தரிக்கும் போது - அவர்
கண்கள் பனிக்கவில்லை
நா தழுதழுக்கவில்லை
குரல் உடையவில்லை

பிறகு தமிழகம் பற்றிச்
சொன்னார்:

விரட்டிய அதிகாரிகள்
வேட்டையாடிய காவல்துறை
பிச்சையிட்ட தமிழர்கள்...

அவர் கண்கள் கலங்கின
குரல் உடைந்தது.

சிவசேனைக்காரனிடம் அவர்
அதைத்தான் எதிர்பார்த்தார்

தமிழகத்திடம் இதை
எதிர்பார்க்கவில்லை

பத்து நிமிடங்கள்
பத்தே நிமிடங்களில்
எண்ணெய் ஊற்றி எரித்து
சாம்பலைக் கையில்
தந்தது - சிவசேனை

அவர் நெஞ்சில் தாங்கிவந்த
தீச்சூடு மாறாத சாம்பலை
நூறுமுறை
கிளறி, ஊதி - ஏன்
கொளுத்தியும் பார்த்தது தமிழகம்

ராசேந்திரன் கண்கலங்கினார்

● ●

ஊரடங்கு இல்லையென
பெருமைப்படும் தமிழகமே!

கலவரமில்லை
கலக்கமும் இல்லை

கொலைவெறியில்லை
இரக்கமுமில்லை

இது பெரியாரின் தேசமல்ல
ஞான சம்பந்தனின் தேசம்

பகுத்தறிவை
ஞானப்பால் பருகிவிட்டது

புலனியக்கம் குறித்த
மருத்துவ விஞ்ஞானம்

**கம்பீரமான**
**பிரகடனங்கள்**
**கிறங்கச் செய்யும்**
**சொற்சிலம்பங்கள்...**
**ஊமையின் அமைதி**
**ஞானமா?**
**கோழையின் அமைதி**
**விவேகமா?**

பொய்த்துவிட்டது

நம்புங்கள்!
நமது தோலுக்கு
மூளை உத்தரவு தருவதில்லை
மூளையைத்
தோல் இயக்குகிறது.

இரும்பு, தங்கம், பாதரசம்...
உறுதியில்
அனைத்தையும் வென்றது
நமது தோல்

சினத்தை
விழுங்கிச் செரித்த இனத்தை
நீங்கள் கண்டதுண்டா?
தமிழினம்தான்.

கண்கள் கலங்காமல்
உதடுகள் துடிக்காமல்
நெற்றி நரம்புகள் புடைக்காமல்

வெண்ணெயாய்க்
குடலில் கரைந்து விட்டது சினம்.

துண்டிக்கப்பட்ட கைகளுக்காக
கண்ணீர் சிந்தத் தயங்கும்
கண்கள் ...

கண்ணீரின் கரிப்பைச்
சுவைத்த பின்னும்
துடிக்க மறுக்கும் உதடுகள் ...

அமைதி .... அமைதி

தமிழகமே
உன் அமைதியின் ஆன்மாவைத்
தேடித்தேடி
நான் துவண்டேன்
உன் மவுனத்தின் நிறமென்ன?

கருப்புச்சட்டை
ரஜனி ரசிகனின் சீருடையாக
உருமாறியது
வரலாற்று விந்தையா
வரலாற்று நியாயமா?

நான்கு லட்சம் மனிதர்கள்
தமிழர்கள்
சபிக்கப்பட்ட முஸ்லீம்கள்

நான்கு லட்சம் மனிதர்கள்
வேரோடு
பிடுங்கியெறியப்பட்ட பின்னரும்
ஆயிரம் உயிர்கள்
சுள்ளிகளைப் போல
எரிக்கப்பட்ட பின்னரும்
கலங்காத கண்கள்
தமிழர் கண்கள்


உயிருடன் எரிக்கப்பட்ட
ராசேந்திரனின் குழந்தைகள்

படிப்பகம்

www.padippakam.com

பம்பாயை கொளுத்திய தீவட்டிகள்
கோவையில் ஊர்வலம் வந்தாலும்
குமுறாத நெஞ்சம்
தமிழன் நெஞ்சம்

இன்னும்
எத்தனை சகோதரிகளின்
கனவுகள் கலைக்கப்பட்ட பின்
உங்கள் உணர்வுகள் விழிக்கும்?

எத்தனை தாய்மார்களின்
ரத்தக் கண்ணீர் பெருகினால்
உங்கள் கல்மனம் கரையும்

அறிவார்ந்த நண்பர்களே
உங்களைத்தான்!

வழக்கம்போல நீங்கள்
விருட்டெனத் தலைதிருப்பி
'மடத்தமிழர்களை'த் தேட வேண்டாம்
மந்தைகளைத் தேட வேண்டாம்.

நான்
மலைப்பிரசங்கம் செய்ய
வரவில்லை
ஒலி பெருக்கியினூடாக
காற்றில் விதை தூவ
வரவில்லை
பதியன் போட
அரிவாளுடன் வந்திருக்கிறேன்

உங்களைத்தான் அழைக்கிறேன்

உங்கள் முகவாயைப்
பிடித்துத் திருப்பி
நேருக்கு நேர் கேட்கிறேன்

விழிகளைத் தாழ்த்தாமல்
எனக்கு
விடை சொல்லுங்கள் பார்ப்போம்

பம்பாயில் ...
புத்தகங்களை அடுக்கிவைத்து
நம் பிள்ளைகளை எரித்தபோது,

குட்டிபோடக் காத்திருந்த
மயிலிறகுகள்
கனவுக் குருத்துகளுடன்
கருகித் தீய்ந்தபோது

நீங்கள்
என்ன செய்து கொண்டிருந்தீர்கள்

உங்கள் பிள்ளைக்கு
ஆங்கிலம்
புகட்டிக் கொண்டிருந்தீர்களா?

நிகழ்காலத்தின்
கரும்புகையை ஊடுருவி
எதிர்காலத்தின்
ஒளியைச் சந்திக்கும் வித்தையை
உங்கள் பிள்ளைக்கு
பயிற்றுவித்துக் கொண்டிருந்தீர்களா?

விந்தியத்தைப் பிளந்துவந்த

## ராசேந்திரனுக்கு நீங்கள் செய்யக்கூடியது என்ன? பத்து ரூபாய்? இரண்டு சொட்டு கண்ணீர்? ஒரு கவிதை?

நம் தாய்மார்களின் கதறல்
உங்கள் செவிப்பறையில்
மோதிய போது
இளையராஜாவில்
லயித்திருந்தீர்களா?

நம் சகோதரர்களின்
ரத்தம் சுவைத்த ஓநாய்கள்
உங்கள் தெருவில்
உலா வந்தபோது
கதவைத் தாழிட்டுக் கொண்டீர்களா?

செய்தித் தாட்களின்
கருப்பு வரிகளின் ஊடாக
வெள்ளைப் பயங்கரம்
உங்கள் முகத்தில்
வெறித்தபோது
முகம் திருப்பிக் கொண்டீர்களா?

பார்ப்பனக் கும்பலின்
கோர நடனம் கண்டு
உங்கள் ரத்தம்
உறைந்ததா?
கொதித்ததா?

'உறைந்ததென்றால்
கோழையே ... ஒதுங்கு.

'கொதித்ததென்றால்
சொல்லுங்கள்
என்ன செய்தீர்கள்?

உண்மையின் வீரியத்தை
நீர்க்கச் செய்யும்
நய்மான கவிதைகள்
நாசமாய்ப் போகட்டும்
நேரடியாகச் சொல்லுங்கள்

கையாலாகாத்தனத்திற்கு
முலாம்பூசி மின்ன வைக்கும்
உங்களுடைய
'திரிசங்குவின் ★
இரவல் சொர்க்கம்'
அறுந்து விழட்டும்

நேரடியாகக் கேட்கிறேன்
என்ன செய்தீர்கள்?

ஏன் உங்கள் விழிகள்
நிமிர மறுக்கின்றன?

எட்டுத் திசைகளிலும்
தீப்பற்றி எரியும் உண்மை
கண்களை கூசச் செய்கிறதா?

'நரகத்திலிருந்து' கிளம்பும்,
நம் மூதாதையர்களின்
அடக்கவியலாத ஓலத்தில்
நிலம் நடுங்குவதை
நீங்கள் உணரமுடியவில்லையா?

ஏன் உங்கள் விழிகள்
நிமிர மறுக்கின்றன?

பார்ப்பனக் கொடுவாளால்
துண்டிக்கப்பட்டு இரைந்து கிடக்கும்
நம் சகோதரர்களின் தலைகள்
நிலம் நோக்கித் தாழ்ந்த
உங்கள் கண்களை
உறுத்தவில்லையா?

அவர்களது விழிகளில்
உறைந்துவிட்ட கோபம்
உங்கள் விழிகளில்
பிரதிபலிக்கவில்லையா?

என்ன செய்தீர்கள்?

நண்பரே,
ஏன் உங்கள் நா வரள்கிறது?
உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு
நீங்கள் சொல்ல முயலும் பதிலை
நான் முன்னரே அறிவேன்.

உங்களால் இயன்றதைச்
செய்தீர்கள்
இயன்றதைச் செய்வீர்கள்.

நல்லது.
இயன்றதைச் செய்பவரே,
ராசேந்திரனுக்கு
நீங்கள் செய்யக்கூடியது என்ன

பத்து ரூபாய்?
இருபது ரூபாய்?
இரண்டு சொட்டு கண்ணீர்?
ஒரு கவிதை?

இவையெதுவும்
அவருக்கு வேண்டாமாம்
அவருக்கு ஈரல்குலை வேண்டும்
பார்ப்பன மதவெறியின் ஈரல்குலை

இயலாதெனில்
ஒரு தீப்பந்தம்
தமிழகத்தின் 'அமைதி'யைப்
பொசுக்க.

★ விசுவாமித்திரன் தயவில் மனித உடலுடன் சொர்க்கம் அனுப்பப்பட்ட திரிசங்கு என்ற மன்னன் இந்திரனால் கீழே தள்ளப்பட, திரிசங்குவிற்காக அந்தரத்தில் சொர்க்கம் ஒன்றை உருவாக்கித் தந்தான் விசுவாமித்திரன்.

படிப்பகம்

www.padippakam.com



## மசூதி இடிப்பு:

# சுவற்றில் ஒரு செங்கல்

*நீங்கள் படிக்கப்போவது ஒரு நாட்குறிப்பு. எஸ்.என்.எம். அப்தி என்ற இல்லஸ்டிரேடட் வீக்லி' செய்தியாளர் அயோத்தியில் டிசம்பர் 6 அன்று நேரில் கண்டதை அனுபவமாக வடித்துள்ளார். ஒரு விதத்தில் இது நாட்குறிப்பல்ல; வரலாறு - ஒரே நாளில் வேகமாக பதினைந்து நூற்றாண்டுகள் இந்திய வரலாறு பின்னே இழுக்கப்பட்டதன் வரலாறு.*

நான் முஸ்லீமாகப் பிறந்தவன் எனது தாய் எல்லா தாயையும் போல என்னைப் பாலூட்டி வளர்த்தாள். எனது தந்தை ஒரு முஸ்லீமின் பழக்க வழக்கங்களைக் கற்றுத்தந்தார். வாரணாசியில் பிறந்தேன்; பீகாரில் படித்தேன்; பின் கல்கத்தாவில் குடிபுகுந்து வளர்ந்தேன்; கல்கத்தாவில் என்னை வளர்த்து அன்பை ஊட்டியவர் ஓர் இந்துத் தாய். ஆக, எனக்கு இரண்டு அம்மாக்கள்.

'90-ல் கல்கத்தாவில். ஓர் இந்துப் பெண்ணை மணம் முடித்தேன். இப்போது ஒருமகன் இருக்கின்றான். அவனுக்கு முஸ்லீம், இந்து இரண்டு பக்கமுமே மாமா, அத்தைமார்கள் ஏராளம். அவனுக்கு இரண்டு கலாச்சாரமுறைகளும் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன.

டிசம்பர் 2 - நான் அயோத்திக்குப் பயணமானேன். எனது இரு தாய்களும், பத்திரிக்கைத் துறை நண்பர்களும் ஒரே மாதிரி புத்திமதி சொன்னார்கள் - 'பேசாமல் ஒரு இந்துப்பெயரைப் பயன்படுத்து; அதேபோல் நடந்து கொள்'. எனது இந்துத் தாயை சமாதானப்படுத்திய போது சொன்னேன்; ''அந்த அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டால், ஒரேயடியாக இந்தியாவை விட்டுப் போக வேண்டியதுதான்''

லக்னோவை அடைந்தபோது நகரையே அச்சம் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது. மாலைச் சந்தையில் ஒருவித பரபரப்பு தெரிந்தது. ஒருபத்து வருடத்துக்கும் மேலாக நான் நம்பியிருக்கும் மதச்சார்பற்ற நண்பர் ஒருவரும் அன்று அயோத்திக்கு வந்திருந்தார். இரவுச் சாப்பாட்டுக்கு முன்னால் தான் நேரில் கேட்ட, பார்த்த செய்திகளை எனக்குச் சொன்னார். மஹந்த் அவைத்யநாத் என்ற ராமஜென்மபூமி இயக்கப்புள்ளி, எந்த ஒரு இயக்கமும் ஒழுங்கு, கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டு ஜெயிக்க முடியாது என்றாராம்; தேவைப்பட்டால் டிசம்பர் 6 அன்று சட்டத்தை மீறுவோம் என்றாராம் வினய் கத்தியார், பி.ஜே.பி, எம்.பி.

சாப்பிடும்போது நாங்கள் பேசவில்லை. என் மனத்தில் பல கேள்விகள். கல்யாண்சிங் அரசாங்கத்தின் மீது உள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பற்றி உச்ச நீதிமன்றம் ஏன் தீர்ப்பு வழங்கவில்லை? அற்ப வாக்குறுதியை வைத்து டிசம்பர் 6 கரசேவை அனுமதிக்கப்பட்டதற்குப் பதிலாக, ஜூலையிலேயே மாநில அரசாங்கம் தொடர்ந்து நீதிமன்ற ஆணைகளையும் புறக்கணித்தற்காகவே ஏன் தடை செய்யப்பட்டிருக்கக் கூடாது? உ.பி. அரசாங்கம் 2,77 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியதே முறையற்றது என்ற வழக்கு விசாரணையில் இருக்கும்போது, அதே இடத்தில் கரசேவை நடத்த ஏன் அனுமதி வழங்கப்பட்டது? மத நம்பிக்கை, சட்டத்தைக் காட்டிலும் பெரியது என்று எப்போதும் பிதற்றிவரும் பி.ஜே.பி. - ஆர்.எஸ்.எஸ். - வ.எச்.பி - பஜ்ரங்தள் கும்பலிடம் உச்ச நீதிமன்றம் ஏன் மலையளவு நம்பிக்கை வைக்க வேண்டும்?

**வியாழன், டிசம்பர் 3, 1992:**

லக்னோவிலிருந்து இயங்கும் ஒரு பத்திரிக்கையாளரை எனக்கு மிகவும் பிடிக்கும். ''அயோத்திக்குப் போவதானால் ஒரு இந்துப் பெயரோடு போ'' அவரும் அம்மா சொன்னதுபோலவே திரும்பச் சொன்னாலும், அது அதிர்ச்சி அளித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாகவே அவர் அயோத்தி விஷயங்களை எழுதியபோதெல்லாம் இந்துப்பெயரைத்தான் பயன்படுத்தினார்; அவர் ஒரு முஸ்லீம்.

கல்கத்தாவிலோ, பீகாரிலோ மதவெறிக் கலவரங்களின்போது பிரச்சனைகள் அவ்வளவு தீவிரமாவதில்லை. ஆனால் ஆண்டுகள் கடந்து சென்றபோது நிலைமைகள் மாறிவிட்டன. வெப்பமும் புழுதியும் கலந்து அடித்த அந்தநாட்களில் அந்த லக்னோ பத்திரிக்கையாளருக்கும், எனக்கும் பலபொதுவான விஷயங்கள் இருந்தன என்பதை விளங்கிக்கொண்டேன்; இருவரும் முஸ்லீம்கள் என்பதைவிட அவை வேறானவை.

மாலைமங்கிய நேரத்தில் பைசாபாத் சென்றேன். மொத்தம் 250 பத்திரிக்கையாளர்கள் அங்கு நிரம்பி வழிந்தார்கள். ஒரு விடுதியின் முதலாளி கே.கே.கபூர் என்ப

படிப்பகம்

www.padippakam.com

வர் சொன்னார்; '' இன்னொரு 10 வருஷம் போனாலும் கோவிலைக் கட்ட முடியாது. நான் இன்னும் சில அறைகள் கட்டப்போகிறேன். அடுத்த கரசேவைக்கு எல்லாப் பத்திரிக்கையாளர்களும் என் விடுதியிலேயே தங்கலாம்''

அயோத்திக்குச் செல்லும் சாலை முழுக்க கரசேவகர்கள் நிரம்பிக் கிடந்தார்கள். ''யே அந்தர் கி பாத்ஹை, போலீஸ் ஹமாரே சாத் ஹை'' (உனக்கொரு ரகசியம், போலீஸ் எங்கள் வசியம்) என்று அவர்கள் கத்திக் கொண்டிருந்தார்கள்.

பாபரி மசூதிக்கு வெளியே காவலில் இருந்த போலீஸ் ஒருவர் புரோகிதர் கொடுத்த 'பிரசாதத்'தை வாங்கி மென்று கொண்டிருந்தார். பிரதேச ஆயுதப்படை ஜவான்கள் பஜ்ரங்தளத்தின் சின்னம் பொறித்த காவி ரிப்பனைத் தலையில் கட்டிக் கொண்டு 'ஜெய் சியாராம்' முழக்கம் போட்டுக் கொண்டிருந்தார்கள். பைசாபாதைப் போலவே அயோத்தியையும் ஆவேசம் கொண்ட கரசேவகர்கள் முழுக்க கையில் எடுத்துக் கொண்டுவிட்டார்கள்.

அயோத்தியில் அஷிம் அன்சாரியின் வீட்டுக்குச் சென்றேன். அது 'பலநடப்புக்களை வெட்ட வெளிச்சமாக்கியது. பாபரி மசூதிக்கு அருகாமையில் 2.77 ஏக்கர் நிலத்தை பி.ஜே.பி. அரசாங்கம் கைப்பற்றியது செல்லாது என்று வழக்கு தொடுத்தவர் இந்த அன்சாரிதான். (ஒன்றிரண்டல்ல, பாபரி மசூதி சம்பந்தமான பல வழக்குகளை அன்சாரி நடத்தி வருகிறார்.) டிசம்பர் 2 அன்று கரசேவகர்கள் அன்சாரி வீட்டுக்குள்ளே புகுந்து தாக்கினார்கள். வருவதை முன்பே ஊகித்துவிட்டதால் அன்சாரி உயிர் தப்பினார். அவரது குடும்பத்தாரை அடுத்த வீட்டு இந்துக் குடும்பப் பெண் கங்காதேவி, தாக்க வந்த கொலைகாரக் கூட்டத்தின் எதிரே மறித்து நின்று காப்பாற்றினார். தாக்குதல் நடந்து 12 மணி நேரம் கழிந்த பிறகே அந்த வீட்டுக்குக் காவல் போடப்பட்டது.

உ.பி. அரசாங்கம் உச்சநீதிமன்றத்துக்கு நவம்பர் 28 அன்று கொடுத்த வாக்குறுதியை மதிக்காது, கரசேவகர்களுடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டுகிறது என்பதை அறிந்தவுடன், ''மசூதியையும் 2.77 ஏக்கர் நிலத்தையும் சட்டரீதியாக ஒரு பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்று உச்ச நீதிமன்றத்திடம் கோரினார் அன்சாரி. அது தள்ளுபடி செய்யப்பட்டது.

**வெள்ளி, டிச. 4, 1992:**

பரீதாபாத் பகுதிக்கு பாபரி மசூதி நடவடிக்கை குழுவின் தலைவர் முகம்மது யூனஸ்; வழக்குரைஞர் தொழில்; அவரை நான் சந்தித்தேன். நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தார் யூனஸ். முந்திய இரண்டு நாட்களிலும் 16 முஸ்லீம் கல்லறைகளை கரசேவகக் குண்டர்கள் இடித்துத் தள்ளினார்கள். இப்ராகிம் ஷா என்ற முஸ்லீம் ஞானியின் கல்லறையைத் தோண்டி எடுத்துப் போட்டார்கள். மதச்சார்பற்ற எல்லாக் கட்சிகளையும் யூனஸ் அழைத்துக் கூட்டம் கூட்டி கொந்தளிப்பான நிலையை விளக்கினார்: ''இந்த நிலைமை மோசமானது. செத்துப்

**''மசூதி நொறுக்கப்பட்டது; அந்தக்கணத்திலிருந்து இந்தியா மதச்சார்பின்மை நாடல்ல என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. கடைசி போலி பாசாங்குத்தனம், அட்டா, எத்தனை விரைவாக, வேகமாக உதிர்க்கப்பட்டுவிட்டது?''**

புதைக்கப்பட்டவர்களையும் கூட வெகுண்டெழச் செய்துவிடும்''. மாவட்ட நீதிபதியைக் கூட்டுக் கமிட்டி சந்தித்தது. கரசேவகர்களைக் கட்டுப்படுத்த வேண்டுகோள் விடுத்தது; அவரும் ஒரு பேச்சுக்கு ஒப்புக் கொண்டாரே தவிர, கரசேவகர்கள் அயோத்தி, பைசாபாத் வீதிகளில் சுற்றித் திரிந்தார்கள்; முஸ்லீம்களுக்கு எதிராக ஆபாசமாகக் கோஷமிட்டார்கள். முஸ்லீம்களைப் பயபீதி ஊட்டினார்கள்.

அயோத்தி ஜானகி பவனம் கோயிலில் மறக்க முடியாத ஒரு காட்சி பார்த்தேன் - போலீஸ் ஒருவர் தரையில் சப்பணமிட்டு உட்கார்ந்திருக்கிறார்; மடியில் துப்பாக்கி; கையில் ஜால்ரா; வாயில் பக்தி கீர்த்தனை. தெரியாதவர்களுக்கு ஒரு தகவல் சொல்கிறேன் - ஜானகி பவனம் என்பது அயோத்தியில் உள்ள ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி. வி.எச்.பி - பஜ்ரங்தள் கூட்டுக் கும்பலின் தங்கு மடம்.

அன்று விடியற்காலையிலேயே நான் விஸ்வ இந்து பரிசத் மையத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. டிச 6 கரசேவையைப் பற்றி செய்தி சேகரிக்க வி.இ.ப. - விடமிருந்து செய்தியாளர் அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும். அந்த மையத்தின் இயக்குனர் ராம்சங்கர் அக்னிஹோத்ரி அட்டை கொடுத்துக் கொண்டிருந்தார். எனக்கும் ஒரு படிவம் கொடுத்து நிரப்பச் சொன்னார். சட்டைப்பையிலிருந்து பேனாவை எடுக்கும்போதே. உள்ளே நுழைந்த என் நண்பர் என்னை அழைத்தார். அவர் ஆனந்த பஜார் பத்ரிகா - டெல்லி அலுவலகத்தைச் சேர்ந்த பத்திரிக்கையாளர். என்னோடு மனம் விட்டுப் பழகும் நண்பர் அவர். அடையாள அட்டையில் ஒரு முஸ்லீம் பெயரோடு நான் நடமாடினால் வெறி பிடித்த கரசேவகர்கள் கொன்றே போட்டுவிடுவார்கள் என்று அவர் ஏற்கெனவே எச்சரித்திருந்தார்.

அவரது ஆலோசனை நினைவில் எழ, என் இதயம் கனக்க என் பெயருக்குப் பதிலாக, 'ஏ.கே.ரே' என்று எழுதினேன். வங்காள மொழியில் இது பெயர்ச்சொல்லாக அன்றி வேறாகப் பயன்படுத்தினால் 'யே கே(ய்) ரே?' (அவன் யார்?) என்று பொருள் தரும். என் வங்காளி நண்பர் எனது நகைச்சுவை உணர்வைப் பாராட்டினார்; ஆனால் என் இதயத்தில் ரத்தம் வடிந்தது. எந்தப் பெயரோடு நான் வளர்ந்தேனோ, அடையாளப்படுத்தப்பட்டு வாழ்ந்து வருகிறேனோ - அதையே - தற்காலிகமாக என்றாலும் கூட - என்னிடமிருந்து அறுத்தெறிய நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

முதல்நாள்தான் தூரதர்சன் ஒரு செய்தி வெளியிட்டது. மத்திய மந்திரிகளான அர்ஜுன்சிங்கும், ராஜேஷ் பைலட்டும் பிரதம மந்திரியின் தூதராக அயோத்திக்கு வரப் போவதாக, நிலைமையைக் கணிக்கப் போவதாகச் சொன்னார்கள்; வந்தார்கள் - கல்யாண்சிங்கை மட்டும் சந்தித்துவிட்டுத் திரும்ப டெல்லிக்குப் பறந்துவிட்டார்கள்.

முதலில் நாங்கள் திகைப்படைந்தோம். பிறகு நிச்சயம் ஆபத்து வரப்போகிறதென்று ஊகித்தோம்; உடனே அப்படியே அமர்ந்து பாபரி மசூதிக்கு ஒரு இரங்கல் குறிப்பு எழுதிவிட நினைத்தேன்; பிறகு, பார்க்கலாம், பொறுத்திருப்போம் என்று தள்ளி வைத்தேன்.

**சனிக்கிழமை, டிச.5, 1992:**

அயோத்தி, முஸ்லீம்களுக்கும் ஒரு புனிதத்தலம் என்பதை அங்கு சென்ற பிறகு தான் கண்டுபிடித்தேன். இஸ்லாமியத் தூதர்களில் ஒருவரது மகனான அஸ்ரத் ஆதம் மணிபர்வத் என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்தார்; அந்த இடம் அயோத்தி ரயில் நிலையத்தின் அருகே உள்ளது. அதற்கு சிஷ் பைகாம்பர் என்று பெயர்.

இந்தியாவில் ஆண்ட முஸ்லீம் மன்னர்கள் அயோத்தியிலும் மசூதிகளைக் கட்டினார்கள். அதில் பாபரி மசூதியும் ஒன்று. 1562-ல் மீர்பாகி என்பவர் பாபரின் ஆணையின் பேரில் இந்த மசூதியைக் கட்டினார்.

பொதுமக்களுக்காக அரசின் செலவிலேயே ஏராளமான கிணறுகள் தோண்டப்பட்டன. பிரிவினை வரை முஸ்லீம்கள் பெருந்தொகையில் சீரும் சிறப்போடும் வாழ்ந்த நகரம் அயோத்தி; பிறகு பெருவாரி முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டார்கள்; பழைய ஆண்டுகளின் சுவடுகளை பல கல்லறைகளிலும், 200 மசூதிகளிலும் இன்றும் காணமுடியும். அயோத்தியின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் முஸ்லீம்கள்; 18000 பேரில் 6000 பேர்.

அயோத்தியில் 400 கோயில்கள் இருக்கின்றன; இதில், ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் பல கோயில்களின் மேனேஜர்கள் முஸ்லீம்களே. 1984-ல் இறந்த மக்சூட் அலி சாகும் வரை மாத்ரசீர் கோயிலை நிர்வாகம் செய்துவந்தார்; முன்னுமியான் என்று அழைக்கப்படும் 87 வயதான அன்சார் ஹுசைனைச் சந்தித்தேன் — அவர் 1984-லிருந்து இன்றுவரை ஒருகோயிலின் நிர்வாகி.

அயோத்தியில் கரசேவகர்கள் கலவரம் செய்தார்கள்; மசூதியை இடித்தார்கள்; காவிக்கொடிகளை அங்கே ஏற்றினார்கள்; ஆனால் மாவட்ட நீதிபதி அன்றுமாலை

படிப்பகம்

www.padippakam.com

அறிக்கை கொடுத்தார்: "அயோத்தியில் நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது: கரசேவகர்கள் மிகமிக அமைதியாக, ஒழுக்கத்தோடு நடந்து கொள்கிறார்கள்." கரசேவர்கள் பத்திரிக்கையாளர்களின் கார்களைக் கூட விட்டுவைக்கவில்லை; எல்லோரையும் வழிமறித்து 'ஜெய்சியாராம்' என்று சொல்லச்சொன்னார்களே என்று கேட்டபோது, அவர் "கரசேவகர்கள் உற்சாகத்தில் அப்படிச் செய்திருக்கலாம்" என்று சப்பைக்கட்டு கட்டினார். அவர் மாவட்டநீதிபதியா? கரசேவகரா? கோயில்க்கட்டுவதே அந்த அதிகாரியின் முழு லட்சியமா?

லக்னோவில் கல்யாண்சிங் பத்திரிக்கையாளரிடம் பேசினார்: "அயோத்தியில் எல்லாப்பாதுகாப்பு ஏற்பாடுகளும் முழுக்க முழுக்க சுறாராகச் செய்யப்பட்டிருக்கின்றன; உச்சநீதி மன்றத்துக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி சொல்லிலும் சரி, உணர்விலும் சரி முழுமையாகக் காக்கப்படும். பாபரி மசூதியின் ஒரே ஒரு செங்கல் கூட பாதிக்கப்படாது."

கறுப்பு ஞாயிறு, டிசம்பர்6, 1992:

சரியாக பிற்பகல் 4.55 மணிக்கு நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் விளங்கும் மதச்சார்பின்மைக்கு அயோத்தியில் சாவுமணி அடிக்கப்பட்டது; பாபரி மசூதியின் மத்திய மகுடம் நொறுக்கி வீழ்த்தப்பட்டது - கரசேவகர்கள் அதன் மீது பாய்ந்து குதறினார்கள்.

மசூதி நொறுக்கப்பட்டது அரசியல் சட்டத்திற்கு எதிரானது: சட்டவரையறைக்கு எதிரானது. அந்தக்கணத்திலிருந்து இந்தியா மதச்சார்பின்மை நாடல்ல என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. கடைசி போலி, பாசாங்குத்தனம், அடடா, எத்தனை விரைவாக, வேகமாக உதிர்க்கப்பட்டுவிட்டது?

மசூதிமீதான தாக்குதல் சரியாக காலை 11.55-க்குத் தொடங்கியது: கரசேவகர்கள் கையில் கோடரிகள், வெட்டுக் கத்திகள், மண்வாரிகள், சம்மட்டிகள், இரும்புக் கம்பிகள் ஆகிய ஆயுதங்களோடு மசூதியின் மகுடங்கள் மீது ஏறினார்கள்: நூற்றுக்கணக்கான போலீஸ், அதிகார அரசு எந்திரம் வெறுமனே கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்தது. துப்பாக்கிச் சூடு கூட அல்ல, ஒரே ஒரு லத்திக்கம்பு கூட அசைக்கப்படவில்லை: வெறிகொண்டு தாவிவந்த கூட்டத்தை முறையாக வழி அனுப்பி வைத்தார்கள் - சிறப்பு மேடையிலிருந்து - பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பஜ்ரங்தள் கும்பலின் பெருந்தலைவர்களான எல்.கே.அத்வானி, அசோக்சிங்கால், கிரிராஜ் கிஷோர், முரளிமனோகர் ஜோஷி, விஷ்ணு ஹரி டால்மியா, வினய்கத்தியார், உமா பாரதி, பெண் துறவி ரிதம்பரா.

வலது மகுடம் பிற்பகல் 2-45க்கும், இடது மகுடம் பிற்பகல் 3-45க்கும் வீழ்த்தப்பட்டன: சுற்றுச்சுவரும், உள் சுவர்களும் மெள்ளமெள்ளச் சரியத் தொடங்கின; 4.55-க்கு மத்திய மகுடத்தின் மீது இரும்புக் கொக்கி இணைத்த நீளமான கயிறு வீசப்பட்டு, மகுடம் இழுத்து எறியப்பட்டது. சூரியன் மறைந்த அந்தி நேரம் - பாபரி மசூதி



பார்ப்பனப் பண்டாரங்களின் கெக்கலிப்பு—
வெற்றிப் படிக்கட்டுகளா?

அங்கே இல்லை; வெறும் சுண்ணாம்பு, கல் சிதிலமாக மசூதி நொறுங்கிச்சரிந்து விழுந்து கிடந்தது. இனி மறுபடி ஒரு சூரிய உதயத்தை பாபரி மசூதி காணப்போவதில்லை.

மத்திய மகுடம் சரியத் தொடங்கிய கடைசிநேரத்தில் ஒலிபெருக்கியைப் பிடித்துக்கொண்டு உமாபாரதி கூச்சலிட்டார்: "ஏக் தாக்கா அவுர்தோ, பாபரி மஸ்ஜித் தோடு தோ"

எங்கு பார்த்தாலும் கைதட்டல்; பஜனைகள்; கரைபுரண்டு ஓடும் மகிழ்ச்சி ஆரவாரம். உமாபாரதி மறுபடி பஜனைப்பாட்டைத் தொடங்கினார்: "ராம் நாம் சத்ய ஹை, பாபரி மஸ்ஜித் துவஸ்த ஹை"

பாபரி மசூதிக்கு நேர் எதிரே மானஸ் பவன் விடுதி. அதன் மேல்மாடியில் உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் - கரசேவை பற்றி செய்தி எழுத, படம்பிடிக்க நின்றிருந்தார்கள். ஐந்துமணி நேரம் நடந்த மசூதி உடைப்பை நேருக்குநேர் பார்த்த அதிர்ச்சியில் ஒன்றிரண்டு 'இந்து'ப் பத்திரிக்கையாளர்கள் அடக்கவே முடியாமல் வாய்விட்டு அழுதார்கள். நான் அழவில்லை; கண்ணீர் வெப்பமாய்த்திரண்டது; ஆனால் அதை அடக்கிச் சேமித்துக் கொண்டேன், இனிவரும் 100 வருடங்களில் அழுவதற்காக.

அங்கே மசூதிஇடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது; இங்கே செய்தியாளர்கள் தாக்கப்பட்டார்கள்; திட்டமிட்ட தாக்குதல் - நோட்டுப் புத்தகங்கள் பறித்துக்கிழிக்கப்பட்டன; கேமெராக்கள் அடித்து நொறுக்கப்பட்டன; செய்தியாளர்களும், புகைப்படக்காரர்களும் அடித்து விரட்டப்பட்டார்கள்; ஒரு வகையில் அதுவும் நல்லதற்குத்தானோ என்று தோன்றியது - காரணம், பத்திரிக்கையாளர்கள் இந்துத்துவ வெறியைக் கொஞ்சம் ருசி பார்க்க வேண்டாமா? ருசிபார்த்தார்கள். மத அடிப்படைவாத அமைப்புக்கள் தங்கள் கருத்துக்களை முழுக்க முழுக்கப் பிரச்சாரம் செய்து பிரபலப்படுத்த இதே பத்திரிக்கைத்துறை துணைபோனதல்லவா? இந்திய பத்திரிக்கைத் துறை அப்பிரச்சாரத்தை தங்கள் 'பிறப்புரிமை' என்று தானே கருதின?

மசூதி இடிக்கப்படுவதற்கு மத்திய ஆட்சி பாதுகாப்பாக, துணையாக நின்றது. இது ஏற்கெனவேயே திட்டமிட்ட வேலை. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், மாலத்தீவைக்காக்க ஐந்தே மணிநேரத்தில் இந்தியத் துருப்புக்கள் அனுப்பப்பட்டது சாத்தியமானது: ஆனால் அதுவே பாபரிமசூதியைக் காக்க அனுப்பப்படவில்லையே, ஏன்?

மசூதி இடிக்கப்பட்டுவிட்டது; கரசேவகர்கள் முஸ்லீம் வீடுகளை, வேறுபல மசூதிகளைக் கொளுத்தத் தொடங்கினார்கள்; முஸ்லீம் கல்லறைகளைத் தோண்டி எடுத்துப்போட்டு கேவலப்படுத்தினார்கள்: ஆயுதக் காவல்படை கைகட்டி வாய்பொத்தி நின்றது, அத்துமீறி நொறுக்கப்பட்ட ஒரு மசூதிக்குள்ளே அனுமன் சிலை வைக்கப்பட்டது.

நான் அயோத்தியை விட்டுக்கிளம்பினேன். என் ஏலாமைமீது, என் மலட்டுத்தனத்தின்மீது கோபம் பொங்கியது. எனது வீரியத்தின் சின்னமான என்மகன் பல மைல் தொலைவில் கல்கத்தாவில் இருந்தான். அவன் முழுவதுமாக முஸ்லீமும் அல்ல; முழுவதுமாக இந்துவும் அல்ல. அவனது மதம் எது?

அது எதுவாக இருந்தால் என்ன, அவன் இனி பாதுகாப்பாக வாழமுடியுமா?

★

படிப்பகம்

www.padippakam.com



# ஊரடங்கு

நகரம் அவிழ்த்துப் போட்ட உள்ளாடையாய்க் கசங்கிக் காட்சி தரும். தாராவி குடிசைப் பகுதி வழக்கமான இரைச்சல் இன்றி வாய்மூடிக் கிடந்தது. எப்பேர்ப்பட்ட 'ஸ்டிரைக்' நடந்தாலும் ' பந்த் ' நடந்தாலும் ஓய்ச்சலின்றி 'உறைக்கு' (சாராயம்) போட்டா போட்டி நடக்கும் ரங்காவின் குடிசைக்கு முன்பு கூட கூட்டம் ஏதுவுமில்லை.

பொழுதுக்கும் நகரத்தின் சொகுசான அசைவுகளுக்கு உழைத்து விட்டு, தள்ளாடி வரும் கூலிகளின் கால்களின் நடமாட்டம் ஓய்ந்திருந்தது. ஆதரவாய் 'இச்சு' கொட்டி ஒரு உருண்டை சோறு வைக்கும் நடைபாதைவாசிகளைக் காணாமல் தெரு நாய்கள் 'திருதிரு'வென முழித்த வண்ணம் அங்கு மிங்கும் அலைந்தன.

''இன்னும் இருபத்திநாலு மணி நேரம் ஊரடங்கு உத்திரவு அமல் ... மாலை ஒரு மணி நேரம் தளர்த்தப்படும்...'' போலீசும் தெருநாய்கள் போல ஊளையிட்டு திரிந்தது. பம்பாயே மரத்துப்போன மாதிரி கிடந்தது. வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாவண்ணம் போக முடியாதபடிக்கு காற்றில் பரவிய மனித துர்நாற்றம் அச்சுறுத்தியது. எதிரெதிர் குடிசைகளுக்குள் விசும்பலும், முனகலும், வெளியே போன நபர்களை இன்னும் காணவில்லையே என்ற அவலமும் நிறைந்திருந்தது.

''மலரு ஏன் இப்புடி கேவிக்கேவி அழுவுற, ஊரு இப்புடி இருக்குறப்ப அவுரு எப்புடி வரமுடியும்? கம்பெனிலயே தங்கிருப்பாரு, கொஞ்சம் ஒஞ்சிச்சின்னா வரலாம்னு இருப்பாரு . நீ வேற அழுது அழுது படுத்துக்காத',

''இல்லக்கா பயமா இருக்கு, நேத்து ராத்திரி போலீசு வண்டி நெறைய பொணமா போச்சுது''

மூக்கையும் வாயையும் முந்தானை தலைப்பில் பொத்தி குலுங்கினாள். பாத்திமாவுக்கு பரிதாபமாக இருந்தது.

''சொல்றத கேளு மலரு, ஒண்ணும் ஆயிருக்காது பயப்புடாத இன்னைக்கு வெளில போயி தேடமுடியாது. நாளைக்காவது ஆயிஷா வாப்பாப் போயி, உன் வீட்டுக்காரு வேல பாக்ற எடத்துல பாக்கச் சொல்றேன். தா . இந்த கஞ்சிய குடிச்சிட்டு படு''

பாத்திமாவின் ஆறுதல் வார்த்தையில் கொஞ்சம் தேறினாள். முழங்காலில் புதைத்திருந்த முகத்தை நிமிர்த்தினாள். கண்கள் இரத்தம் கட்டியது மாதிரி சிவந்திருந்தன. ''சரிக்கா . நீ போயி புள்ளைய பாரு''

''உம், ஒரு வாரமா அவ வேற உள்ளாறயே அடஞ்சி இருக்க முடியாம அடம் பண்றா: நாளைக்கு நொய்யும் இல்ல, அடுப்புக்கு சீமெண்ணையும் இல்ல என்ன பண்றதுன்னே தெரியல.''

''ஆமக்கா. தங்கராசண்ணே விட்லயும் ஏதுமில்லையாம் வகுத்தெறிச்சலா இருக்கு''

''பாலிப்பயலுக ... ஊரையே மூச்சடைச்சிட்டானுக. மலரு, ஏதும்னா எழுப்பு. தூக்கம் வருது வாரேன்.''

வீட்டிற்குள் ஆயிஷா அழுது கொண்டிருந்தாள். கரீம் என்னதான் சமாதானம் சொல்லியும் அவள் சிணுங்கிக் கொண்டே இருந்தாள்

''என்ன வேணும் சொல்லும்மா?''

''வெள்ளாட போவுணும் ...''

''வெளில போனா பூச்சாண்டி புடிச்சிட்டு பூடுவான்''

காலையும், கையையும் உதறியபடி அடம்பிடித்தாள்.

''ஆயிஷா தோ பாரு, தோ பாரு... ஏங்க அழுவுறா''?

பாத்திமா பிள்ளையை தூக்கிக் கொண்டாள்

''அழாம சொன்னதக் கேட்டா ... அப்பாவ தேங்காபன்னு வாங்கித்தர சொல்வேன். சீக்கிரம் இந்தச் சோறு தின்னுட்டு படு. அப்பொறம் இருட்டிடும். வெளக்குக்கு எண்ணயும் இல்ல''

''போ, போ... கண்ணைக் கசக்கியபடி தலையைச் சொடுக்கினாள்.

''சொல்றத கேக்குலேண்ணா வெளில கொண்டு போயிவுட்டா பூச்சாண்டி வந்து தூக்கிட்டு போயிடுவான்''

''நெசம்மா.'' - கண்ணை விரித்து மூக்கில் இசுப்பியவாறு ஆச்சர்யமாய் ஆயிஷா விழித்தாள்.

''ஏம்மா பூச்சாண்டியா, அஞ்சு கண்ணனா...''

''பூச்சாண்டி, அஞ்சு கண்ணன் ரெண்டு பேரும் வருவான் கைல கத்தி சூலம் நெத்தில சேப்பா கண்ணு எரியும்.''



படிப்பகம்

www.padippakam.com

பாத்திமா பிள்ளைக்கு சொன்ன அடையாளத்தை கரீமால் கதை என்று நினைக்கத் தோன்றவில்லை. முந்தாநாள் நட்ட நடுரோட்டில் ஒரு தம்பதியை வெட்டி சாய்த்த கும்பல் கூட அதே அடையாளத்துடன் இருந்ததை நினைக்க முகத்தில் சிரிப்பு எழவில்லை.

கதையைக் கேட்டவுடனேயே ஆயிஷா அம்மாவின் மார்பில் ஒடுங்கிக் கொண்டாள்.

''ம்மா படுத்துக்கம்மா...''

''தோ கொஞ்சுண்டு சாப்புட்டு படு...'' ஊட்டிவிட்டு வாய் துடைத்து படுக்க வைத்தாள்.

''அம்மா கை போட்டுக்க...''

''பயப்புடாம படுறீ கதைதாண்டி...'' நெஞ்சில் மெல்லமாய் தட்டிக் கொடுத்தாள்.

''ஏங்க நாளைக்கு என்ன பண்றது''?

''அதான் புரில, கடை, தொறக்குதா என்னான்னும் தெரியல கைலயும் இருவது ரூபாதான் இருக்கு ... நாடார் கடை திறக்கலேன்னா - அவுரு வீட்ல போயாவது எண்ணெயும், அரிசியும் வாங்கலாம்னா வெளியே போக முடியலயே என்ன பண்றது''

'போலீசும், மிலிட்டரியும் இருக்கும்ல, பிறகு என்ன பயம்''

''ஆமாம் அவன் கிழிச்சான் நேத்து மேக்க உள்ள குடிசைங்கள எரிக்குறப்ப அவுனுகளும் சேந்துகிட்டானுகளாம்''.

''அப்புடியா...? நம்ப முடியாமல் பாத்திமா ஆச்சரியப்பட்டாள். கைராட்டை சுற்றி காந்தி வாங்கிய சுதந்திரம் என்பதை இன்னும் நம்புகிறவள் அவள். இராணுவத்தையும், போலீசையும் பற்றி அவளுக்கு தெரிய வாய்ப்பில்லை.

''பாத்திமா! இன்னும் ஒனக்கு ஒண்ணும் தெரியல. போலீஸ்காரன் சிவசேனாகாரன வுட்டுட்டு .... வீட்லேந்து வெளிய வர்றவங்கள அடிக்குறான் தெரியுமா?! நேர்லயே பாத்தேன் ... படு படு நாளைக்கு பாக்லாம்''

● ● ●

இரவெல்லாம் சின்ன சத்தம் கேட்டாலும் திடுக்கென எழுந்து உட்கார்ந்து உட்கார்ந்து பாத்திமாவுக்கும் கரீமுக்கும் தூக்கம் இல்லை..விடியலில் கொஞ்சம் அசந்து தூக்கம் வந்தது

ஆயிஷா பூனை குட்டி மாதிரி தலையை தூக்கினாள்.

''யம்மா... யம்மா...

''படுத்துக்கடி ...'' பாத்திமா பதிலுக்கு கையால் வருடிக் கொடுத்தாளே ஒழிய கண்ணை திறக்கவில்லை. நறநறவென்று தலையைச் சொறிந்தபடிக்கு ஆயிஷா சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்தாள். அடுப்புக்குமேல் ஆவிபறக்க கடையில் வாங்கி வந்த 'டீ'த் தண்ணி இருக்கும் என எதிர் பார்த்து ஏமாந்தாள்.

எதிர்த்த மாதிரி உள்ள மலர் வீட்டிற்குள் நுழைந்தாள்.

''ஏ ஆஷா வா வா அம்மா இன்னும் எழுந்திரிக்கலையா ....''

''ஊ ஹிம் ... இல்ல டீ... டீ.... கட்டை விரலை மடக்கி குடிப்பது மாதிரி பாவனை செய்தாள்.''

''கடையே இல்லம்மா ... தெறந்தோண்ண வாங்கலாம்''

''நா...ம் போயி ஆங்காறவா?''

''சரி நாளைக்கு போயி நீயே வாங்கலாம்'' என்ன, இப்ப வூட்டுக்க போவியாம். கண்ணு செல்லமாய் அணைத்து முத்தமிட்டாள்.

வீட்டில்தான் அவள் பெயர் ஆயிஷா ... அக்கம் பக்கத்தில் வாய்க்கு தோதாய் ''ஆஷா'' தான் அழைத்து, அழைத்து அவளுக்கே 'ஆஷா'தான் பதிந்து போனது

''ஏங்க என்னவோ ரேடியோ வச்சி சொல்லிட்டுப் போறானே என்னங்க''

''இன்னும் ஊரடங்கு உத்தரவு இருக்காம் நாசமாபோவ, நாம புள்ளகுட்டியு வச்சிட்டு எப்புடி பட்டினி இருக்கறது. அன்னாடம் பொழப்பும் போயி - இப்புடி உள்ளாற இருந்து சாவறத விட ஒரே அடியா வெளில போயி சாவலாம்''

மனசு நொந்து கரீம் உணர்ச்சிகளை கொட்டினான்.,

''ஆமாம்ப்பா .... நம்பவீட்லயும் எல்லாம் தீந்துருச்சி. அடுப்பு வைக்க எண்ண இல்ல. ஒண்ணுமில்ல ... என்ன பண்லாம்'' அடுத்து வீட்டுத் தங்கராசும் சொல்லிச் சொல்லி ஆற்றுப்போனான்.

''தங்கராசு அங்காரு, ரோட்ல கலாட்டா நடக்குது உள்ளாற போ ஊரடங்குன்னா நமக்குத்தான் காலிப்பயலுவ ஒயுநானுகளா - போ மலரு நீயும் போக்கா''

அனைவரும் நிமிடத்தில் ஆமை ஓட்டுக்குள் அடங்கியது மாதிரி குடிசைக்குள் அமிழ்ந்தனர்.

'புதிய கலாச்சாரம்' பற்றிய அறிக்கை
4-வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1 | வெளியிடும் இடம் | சென்னை |
| 2 | வெளியிடும் காலம் | மாதமொன்று |
| 3. | அச்சிடுபவர் தேசியஇனம் முகவரி | பிரேம் அச்சகம் தமிழர் 107, ஏ பெரியார் பாதை (மேற்கு), சென்னை 600 094 |
| 4 | வெளியிடுபவர் தேசிய இனம் முகவரி | வி வல்லபேசன தமிழர் 45,செங்குன்றம் சாலை வில்லிவாக்கம் சென்னை - 600 049 |
| 5. | ஆசிரியர் தேசியஇனம் முகவரி | வி வல்லபேசன் தமிழர் 45,செங்குன்றம் சாலை சென்னை - 600 049 |
| 6 | உரிமையாளா தேசியஇனம் முகவரி | வி வல்லபேசன தமிழர் 45,செங்குன்றம் சாலை சென்னை - 600 049 |

வி வல்லபேசனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்

(ஒப்பம்) வி வல்லபேசன
வெளியிடுபவர்

1-3-'93

''ஏங்க இங்க வந்தா என்ன பண்றது?''

என்ன பண்றது முடிஞ்சவரைக்கும் எதுத்து வெட்ட வேண்டியதுதான் கரீம் அழுத்தமாய்ச் சொன்னான்.

ஆயிஷாவுக்கும் முழுவதுமாக விளங்கவில்லை

''ஏம்மா பயப்புடுற ... பசிக்குதும்மா...'' கெஞ்சுவது பாவமாய் இருந்தது.

ரோடு இப்போது வெறிச்சோடிக் கிடந்தது.

''டின்னக் குடு... நான் போயி நாடார் வீட்ல வாங்கியாறேன்.''

. அதற்குள் தங்கராசு வந்தான். கரீம் நீ போவாத நானாவது போறேன்''

பாத்திமாவுக்கு இருவர் போவதும் நல்லதாகப் படவில்லை தான் போகலாமா எனக் கேட்டாள்.

''பொம்பளன்னா
வீட்ருவான்ல...''?

''போடி பயித்தியக்காரி அசிங்கம் பண்ணி கொன்ருவானுவ'' கரீம் யோசிக்க யோசிக்க ஆயிஷாவையே அனுப்பலாம் போல் தோன்றியது.

''சின்னக் கொழந்த போனா பாவம்னு ஒண்ணும் ஆவாது, அன்னிக்கு கூட ராமையன் பையன்தான் அரிசி வாங்கப் போனான் யாரும் ஒண்ணும் பண்லயாம்''

கரீம் சொன்னது அவ்வளவு சரியாகபடவில்லை என்றாலும், இருக்கின்ற சூழ்நிலையில் ஆயிஷா போல் சின்னக் குழந்தை போனால் யாரும் எதுவும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை அதிகம் இருந்தது.

ஒருமனதாய் எல்லாருக்கும் முதலில் உலைவைக்க ஏற்ற வழி இதுவாகப்பட்ட ''ஆஷா! போய் நாடார் வீட்ல வாங்கிட்டு ஓடியாந்துறியா'' என பாத்திமா தயங்கி தயங்கி கேட்டாள்.

. ''நா போறம்மா'' ஆவலாய் முன்வந்தாள்.

''டின்ன தா'' ... எப்புடியாவது வெளியில் போனால் போதும் என்று, கூண்டுக் கிளி இறக்கையை அடித்து புறப்படுவது போல் ஆஷாவுக்கு குதூகலமாய்பட்டது.

அவளுக்கு நெஞ்சு உயரம் மண்எண்ணெய் 'கேன்' இருந்தது. அதில் எண்ணெய் ஊற்றினால் அவ்வளவு பெரிசை தூக்கி வருவாளா என்று கூட யாருக்கும் யோசிக்கத் தோன்றவில்லை.

ஆஷா மெல்ல மெல்ல 'கேனை' நெஞ்சில் முட்டுக்கொடுத்து ரோட்டைக் கடப்பதற்குள் ஒரு கும்பல் தலையில் முண்டாசும், கையில் கட்டை, பெட்ரோல் பாட்டிலுடன் விரைந்து வந்தது.

ஆஷா வெறித்துப்பார்த்து ஒதுங்கிப் போனாள், கும்பல் ஆத்திரமடைந்தது.

''ஏய்... ருக்கோ ... ருக்கோ (ஏய்



படிப்பகம்

www.padippakam.com

ஆு நில்லு)'' ஒருவன் பான்பராக்கை ப்பியபடி ... ஆஷாவை தோளைப்பி த்து திருப்பினான்.

''நாம் கியா ஹை ஏய்...'' பெயரைக் கட்டு மிரட்டினான்.

''ஆஷா''

''ஓ மத்ராஸி' அவர்களுக்குள் பேசிக் கொண்டனர்.

இது இந்துபெயரா...முஸ்லிம் பெயரா....குழம்பிப்போய்... 'ஜாவ், ஜாவ்' என்று துரத்தினான் பலூன் வியாபாரிக்குப் பின்னால் போகும் ஆர்வத்துடன் கும்பலைப் பின் தொடர்ந்து ஆஷா நாடார் வீடு நோக்கி நகர கும்பல் அவளுக்கு முன் .... நாடார் வீட்டுபக்கம் கையில் ஒரு முகவரி பட்டியலுடன் பார்த்தபடியே விரைந்தது. கும்பலில் ஒருவன் நாடார் வீட்டுக் கதவைத் தட்ட வெளியில் அவர் வந்ததுதான் தாமதம் ஒருவன் அவர் கையை முறுக்கியபடி ஏதோ விசாரித்தான். நாடார் உடைந்த இந்தியில் பதில் சொல்லியபடியே வீட்டுக்குள் இருந்த பிள்ளையார் படத்தைக் காட்டினார்; மனைவியைக் கூப்பிட்டு அவள் நெற்றிப் பொட்டைக் காட்டினார்; தனக்குத் தெரியாத உள்ளூர் ரவுடிகளின் பெயர்களையெல்லாம் தெரிந்தது போலச் சொன்னார்.

சிறிது நேரத் தயக்கத்துக்குப்பின் அந்தக் கும்பலில் ஒருவன் ஏதோ சொல்ல கும்பல் தயக்கத்துடன் வீட்டை விட்டு மெல்ல நகரத் தொடங்க, ஆஷாவின் தலையைக் கண்ட நாடாரின் பெண்டாட்டி அலறினாள்.

''இந்த பாத்திமாவுக்கு பயித்தியம் புடிச்சிப் போச்சா. பச்சப்புள்ளய அனுப்பிருக்குறாளே. எண்ணெயில்லமா ஆஷா ஊட்டுக்கு ஓடிடு''

நாடார் மனைவியின் வாயிலிருந்து பாத்திமா என்ற வார்த்தை வந்தவுடனே அந்தக் கும்பலில் இருந்த ஒருவனின் தலை மட்டும் திரும்பியது.

ஒரே எட்டில் பாய்ந்துபோய் அவன் ஆஷாவை ஒரு பழந்துணியைப் போல கசக்கிப் பிடித்தான்.

''உன் வீடெங்கே?''

ஆஷா அழுதுகொண்டே கேனை விட மறுத்தாள். ''ஸாலா மத்ராஸி'' என்று கத்தியபடியே கும்பல் மீண்டும் நாடார் வீட்டை நோக்கிப் பாய்ந்தது. சில நிமிடங்களில் வீடு எரியத் தொடங்கியது. கசங்கிச் சுருண்ட ஆஷாவை குப்பையைப் போல தீயில் வீசியது அந்தக் கும்பல்.

''ஏங்க இன்னும் ஆயிஷாவக் காணோம்''

''நாங்களே போயிருக்கலாம் போல இருக்கு'' தங்கராசும், கரீமும் நொந்து கொண்டனர்.

பாத்திமா தன்னையே வசவிக் கொண்டாள்.

''பாவிமுண்ட புள்ளகிட்ட கொடுத்து அனுப்புவனா, அதுக்கு பட்னி கெடந்தே போயிருக்கலாம்.''

''அழாத பாத்திமா, நாங்க போயி பாத்துட்டு வாரோம்! ஒருவேளை நாடார் இருக்க வச்சிருப்பாரு''

''சீக்கிரம் போங்க''

தங்கராசும், கரீமும் புறப்பட்டனர். ரோட்டை கடந்தவுடன் நாடார் வீட்டு தெரு முனையிலேயே போலீஸ் வேன் ஒன்று நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய போலீஸ்காரன் இருவரையும் நிற்கும்படி உத்திரவிட்டான். ''தேவடியா மகனே, ஊரடங்கு நேரத்லேயும் மீறி கலாட்டா பண்ண வந்திட்டிங்களா'' மராட்டியில் வைதான்.

''நை சாப்! இல்ல சார் குழந்தைய காணோம்''

சொல்லி முடிப்பதற்குள் ஒருவன் உடைகளைக் கழட்டச் சொன்னான்.

''வேணாம் சார் நம்புங்க'' கரீமும், தங்கராசும் கெஞ்சி மன்றாடினர். போலீஸ் கேட்பதாயில்லை.

''மலரு என்னடி, போன இவுகளையும் காணோம்.'' பாத்திமாவுக்கு மனசு படபடத்தது.

''குருவி கூடு மாதிரி இப்புடி தனித்தனியா கலைஞ்சதுக்கு எல்லோரும் போயிருக்கலாம் போல இருக்கு.''

''நாமாவது போயி பாப்பமா...'' மலருக்கும் காத்திருக்க பிடிக்கவில்லை.

''ஒரு மணி நேரம் ஊரடங்கு தளர்ந்திருக்கும்னு சொல்லியும் ஆள யாரும் காணல, வண்டி நிறைய பொணந்தான் போவுது... எனக்கு பயமா இருக்குடி'' பாத்திமா அழத் தொடங்கினாள்.

''அழாதக்கா உன் தெகிறியத்துலதான் நான் இருக்கேன். வந்துருவாங்க இரு பாக்கலாம்''

''தோ பாத்திமா சீக்கிரம் வீட்ல சாமான எடு. கெழக்க குடிசைல்லாம் கொளுத்திட்டானுவ.'' பால்ராஜ் கத்திக் கொண்டே ஓடினான்.

கையில் கிடைத்த பாத்திரத்தை துணியில் முடிந்து கொண்டு பாத்திமாவும், மலரும் ரோட்டோரம் தலையில் அடித்துக் கொண்டு கதறினர்.

பாத்திமா தாங்க முடியாமல் ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டாள். கூக்குரல்கள் நெடுக எழுந்தன.

ஒரு மணி நேரம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருப்பதால் திரும்பவும் ஜீப் வந்து அலறியது.

விசும்பியபடியே தத்தம் வீடுகளைத் திரும்பிப் பார்த்தபடி தெருவே மூட்டை முடிச்சுகளுடன் நகரத் தொடங்கியது. பாத்திமாவுக்கு ஆயிஷாவும் கரீமும் திரும்ப வேண்டும். மலருக்கோ வேலைக்குப் போன புருசன் திரும்ப வேண்டும். எல்லோரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் நகருவதாக இல்லை. போனவர்கள் திரும்புவதற்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

**துரை. சண்முகம்**

## வேடம் கலைந்தது! விசயம் புரிந்தது!

உசிலை வட்டம் முண்டுவேலம்பட்டியில் மாசி பிறந்தாலே திருவிழாகளை கட்டிவிடும். மூன்று கோயில்களில் திருவிழாக்கள் போட்டி போடும். கருமாத்தூர் கோயிலில் 13 அடிக் குழிதோண்டி தீமிதித் திருவிழா நடந்தது. நடந்த தேதி 18.2.93

அந்தக் கோயிலின் ஆண்டு வருமானம் 25 ஆயிரம் தேறும். இந்த வருடம் அதைக் குறிவைத்து இரண்டு பூசாரிகள் பங்காளிப் போட்டியில் இறங்கினார்கள். இரட்டைப் பூசாரி முறையை.முடிவுக்குக் கொண்டுவந்து ஒரு பூசாரியைத் தேர்ந்தெடுக்கவே இம்முறை தீமிதி நடந்தினார்கள். அதில் ஒருத்தன் ஆர்.எஸ்.எஸ். சாமியார். தீமிதியில் ஒரு போட்டி என்றதும் சனங்களுக்குப் புதுமையாகவும் தோன்றியது. கோஷ்டி மோதல் வரக்கூடும் என்பதற்காக வேடிக்கை பார்க்க போலீஸ் வண்டி நிறைய ஆயுதப் போலீஸ் தயாராக வந்து நின்றது.

சரியாக 6 மணிக்கு ஒருவர் பின்னே மற்றவராக இரண்டுபேர் வழிகளும் தீயில் இறங்கி ஏறிவிட்னர். குலவை, கண்ணீர், கரகோஷம், கடவுள் பக்தியில் கூட்டம் சொக்கியது.

அவர்கள் இறங்கும் போதே விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்களும் தீமிதிப்பதாக திட்டமிட்டனர். இது பிரச்சனையாகும் என்பதால் தயங்கி, கூட்டம் கோயிலை நோக்கிக் கலையும் நேரத்தில், மூடநம்பிக்கையை எதிர்க்கும் முழக்கங்களோடு சரியாக 5 நிமிட இடைவெளியில் தோழர்கள் சிவகாமு, கார்த்தி இருவரும் தீக்குழியில் இறங்கி நடந்தனர். கலைந்த நிலையிலிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் ஆச்சிரியத்தில் கூச்சல் போட்டனர்; பெண்கள் பிரமித்துப் போனார்கள்; பிறகு பலரும் தோழர்களை வரவேற்றுப் பாராட்டி ஆதரித்தார்கள்.

வட்டாரம் எங்கும் விவிமு தீக்குழியிறங்கிய சேதி பரவிக் கொண்டிருக்கிறது. இதையும் சேர்த்து 4 பேர் தீமிதித்துவிட்டதால் யாரைப் பூசாரியாக நியமிப்பார்களாம்? நிலைமை சிக்கலாகிவிடவே. இப்போது போலீசே பூசை செய்வதாகச் செய்தி.

விவிமுவின் இந்த நடவடிக்கையால் போலி வேடதாரிகளின் பொய் மூஞ்சிகள் தீக்குழியில் பொசுக்கப்பட்டன.

*தகவல்: விவிமு, உசிலை வட்டம்*

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை 600 049. அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107. ஏ, பெரியூரர் பாதை (மேற்கு), சென்னை - 600 094. புதியகலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com






மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்
புதிய பாடல் ஒலிப்பேழை

பார்ப்பன இந்து மதவெறிக்கு
எதிரான போர் முழக்கம்

- "எனக்கு அரிசன் என்று பேரு வைக்க யாரடா நாயே!" என்று முழங்கும் கலகக் குரல்
- "சம்புகனின் உயிர் குடித்த ராமன் எங்கே வாடா" என்று குமுறும் வெஞ்சினம்
- "சின்னவாளு, பெரியவாளு அத்தனையும் அவாளு" என சங்கராச்சாரியின் இந்து முகமூடியை கிழிக்கும் கேலி
- "இடித்து விட்டான் மசூதியை இது சரிதானா?" என்று உங்கள் மனசாட்சியை உசுப்பிவிடும் கேள்விக்கணை
- "அக்கிரகாரமின்னு வச்சிருக்கிறவன் யாரடா அனந்தராமய்யரா இல்லை அப்துல் காதரா?" பாரதீய ஜனதாவின் முஸ்லீம் எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு செருப்படி
- "நாமக்கட்டி ஆளப்போவுது" என்று இந்து மதவெறி பாசிசத்தின் உண்மை முகத்தைக் காட்டும் நையாண்டி
- "கங்கை ஆறோடு ரத்தம் கலந்தோடுதே" என்று நெஞ்சைப் பிழியும் சோகம்
- "போர் முரசே ஓய்வினி எதற்கு? வாளெடுத்து வா என முழங்கு" என்று தட்டியெழுப்பும் போர் முழக்கம்

*60 நிமிட ஒலிப்பேழை*

இந்து மதவெறியை எதிர்ப்போரின் ஆயுதம் அசுர கானம்

விலை: ரூ.30.00 பதிவு அஞ்சல் கட்டணம்: ரூ.12.00

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆர்.சீனிவாசன், 45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம், சென்னை-600 049

# புதிய இதிகாசம்

*இதோ
அசுர கானம்
ஒலிக்கத் தொடங்கிவிட்டது.
தேவர்களின் கதா காலட்சேபம்
இனி நடக்காது.*

*இதோ!
ஏகலைவனின் கட்டை விரல்
சுட்டு விரலாகி விட்டது.
இதோ!
சம்பூகனின் ரத்தம்
பிரளயமாய்ப் பொங்கி வருகிறது.
இதோ!
நந்தன்
தன்னை எரித்த நெருப்பைத்
தீப்பந்தமாய் ஏந்தி வருகிறான்.*

*'தீட்டு' என்று ஒதுக்கிவைத்தவன்,
இன்று 'ஓட்டு' என்று
உறவாட வருகிறவனின்
முகத்திரை கிழிக்கப்படுகிறது.*

*ஆலயம் கட்டச்
செங்கல் சுமக்கவைத்து,
ஆலயத்திற்குள் வர
அனுமதி மறுப்பவர்களின்
மாய வலை அறுக்கப்படுகிறது.*

*காலிலே பிறந்தவர்கள்
என்று அவமதிக்கப்பட்டவர்கள்,
இதோ!
காலால் எட்டி மிதிக்கப்
புறப்பட்டு விட்டார்கள்.*

*சேர்ந்து கடைந்த அசுரர்களுக்கு
அமுதம் தராமல்
மயக்கி ஏமாற்றிய
மோகினியாட்டம்
இனி மீண்டும் அரங்கேற முடியாது.*

*இதோ!
அசுரர்களைக்
கதா நாயகர்களாகக் கொண்ட
புதிய இதிகாசம் தொடங்கிவிட்டது.*

*கவிஞர் அப்துல் ரகுமான்*
('அசுரகானம்' ஒலிப்பேழை பற்றி)

படிப்பகம்